பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00


www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 06 திங்கட்கிழமை (19.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 174

# ஹிஸ்புல்லாவுடன் சமரசம் செய்ய அரசு பிரயத்தனம்

## நேற்று ஜனாதிபதி அவரை அழைத்துப் பேச்சு தொலைபேசியில் பிள்ளையான் உரையாடல்

கொழும்பு, மே 19



கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி நியமனம் தொடர்பாக அரசுத் தலைமையுடன் முரண்பட்டு, அரசுக் கூட்டமைப்பிலிருந்து விலகி, தனி வழி போகத் தீர்மானித்துள்ள ஹிஸ்புல்லா அணியினரை சமரசம் செய்து தம் வழிக்குக் கொண்டுவரும் பகீரதப் பிரயத்தனத்தில் அரசுத் தலைமை ஈடுபட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக ஹிஸ்புல்லாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரிமாளிகைக்கு அழைத்து அவருடன் பேச்சு நடத்தினார்.

இதேசமயம் கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிள்ளையானும் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு ஹிஸ்புல்லாவுடன் பேசினார்.

ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று ஹிஸ்புல்லா நேற்று அலரிமாளிகைக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தார். அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் மற்றும் சிலரும் இந்தச் சந்திப்பில் பங்குகொண்டனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நியமனத்தை ஒட்டி எழுந்துள்ள சர்ச்சைக்குத் தீர்வு காண்பது தொடர்பான சில ஆலோசனைகளை இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி முன்வைத்தார் எனக் கூறப்படுகின்றது.

எப்படியும் ஹிஸ்புல்லா அணியினர் அரசுத் தரப்புடன் இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டான்குளத்தில் ஹெலி தாக்குதல்

கொழும்பு, மே 19

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஆண்டான்குளம் பகுதியில் புலிகளின் நிலைகளின் மீது விமானப் படையினரின் எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் நேற்றும் நேற்றுமுன்தினமும் தாக்குதலில் ஈடுபட்டன எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

ஆண்டான்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் தளம் ஒன்றை இலக்கு வைத்தே நேற்று முன்தினம் இரவு 11.50 மணியளவிலும் பின்னர் நேற்றுக்காலையும் எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

படைத்தரப்பின் முன்னரங்க நிலைகளில் இருந்து வடக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் ஆண்டான் குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் கேந்திர நிலைகளே இவ்வாறு இலக்கு வைக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## கோட்டை குண்டுத் தாக்குதல் விசாரணையில் பாதுகாப்பு அமைச்சு தலையிட்டிருக்கிறது

### சந்தேகத்துக்கு உரியது என்கிறார் ரணில்

கொழும்பு, மே.19

கொழும்பு கோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற குண்டுத் தாக்குதல் குறித்துக் கைதான விஜயபாலன் ஜினோந்திரன் (ஜனா) பயங்கரவாதப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு இதில் தலையிட்டிருப்பது சந்தேகத்தை உண்டாக்கியுள்ளது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பேசுகையில் ரணில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கொழும்பு கோட்டைப் பகுதியில் - உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் - கடந்த வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு குறித்த விசாரணைகளை அரசு மூடிமறைக்க முயல்கிறது. தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பிள்ளையான் குழு உறுப்பினருடையது.

பிள்ளையானுக்கும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் கொழும்பில் பாதுகாப்பு அளித்துக்கொண்டிருந்த பொலிஸாரை இலக்குவைத்தே குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குண்டுவெடிப்புப் பற்றிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் முன்நகர்வு முறியடிப்பு 20 படையினர் பலி; 40 பேர் காயம்

### புலிகள் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 19

மன்னாரில் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்நகர்வுக்கு எதிராக புலிகள் நடத்திய தாக்குதலில் 20இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 40இற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர். படையினரின் 3 உடல்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என புலிகள் தரப்பால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் கருங்கண்டல் குளம் ஊடாக வண்ணாங்குளம் நோக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிமுதல் 11 மணி வரை செறிவான ஷெல் தாக்குதல்களுடன் முன்நகர்ந்த படையினர் மீது புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலின போதே 20இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர்; 40இற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர்.

இதன்போது மூன்று உடல்களையும் ஆர்.பி.ஜி. - 1, ஆர்.பி.ஜி. ஷெல் - 4, ஆர்.பி.ஜி. புறப்பலர்-4, ரி-56 ரக துப்பாக்கிகள் - 3, ரவைகள் - 29; குண்டுகள் - 24, பி.கே. சுடுகுழல்-2, பி.கே. ரவைகள் - 228, கிளைமோர்-1 போன்ற பல்வேறு பொருட்களை மீட்டுள்ளோம் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் குறித்து படைத்தரப்பிலிருந்து இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (சி)

## பூஸாவுக்கு மாற்றப்பட்ட 68 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முஸ்தீபு

கொழும்பு, மே 19

கொழும்பு, வெலிக்கடை நியூமகஸின் சிறையிலிருந்து கடந்த 10ஆம் திகதி மாலையில் திடீரென பூஸாவுக்கு மாற்றப்பட்ட 68 தமிழ் அரசியல் கைதிகளும் பூஸாவில் தங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை எனத் தெரிவித்து, அதனை ஆட்சேபித்து உண்ணாவிரதம் போன்ற போராட்டம் ஒன்றில் ஈடுபடுவது குறித்து ஆராய்ந்து வருவதாக நம்பகரமாக அறியவருகின்றது.

பூஸாவில் போதிய அடிப்படை வசதிகள் அற்ற இடத்தில் தாங்கள் அடைத்து வைத்திருக்கப்பட்டுள்ளனர் எனக் கைதிகள் சார்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கைதிகள் பூஸாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டனர் என்றும், அவர்களில் சிலர் அருகில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தாக்கப்பட்டனர் என்றும் முறைப்பாடுகள் எழுந்தமை தெரிந்ததே.

இவ்வாறு பூஸாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகளில் 13 பேர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இலங்கை தெரிவாவதற்கு கடும் எதிர்ப்பு

### ஐரோப்பிய நாடுகள் சில தீவிரம்

கொழும்பு, மே 19

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்ஸிலிற்குப் புதிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நாளை மறுதினம் புதன்கிழமை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள அதேவேளை, ஐரோப்பிய நாடுகள் சில இத் தேர்தலில் இலங்கைக்கு எதிராகப் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

ஐரோப்பாவைச் சேர்ந்த சில நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு மறைமுகமாகப் பிரசாரம் செய்து வருகின்றன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில நாடுகள் பரஸ்பர உதவி அடிப்படையில் இலங்கைக்கு வாக்களிப்பதாக உறுதியளித்துள்ள போதிலும் நடைபெறப்போவது இரகசிய வாக்கெடுப்பு என்பதால் இந்த வாக்குறுதி எவ்வளவு தூரம் உண்மையில் முன்னெடுக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியாதிருக்கும் எனக் கூறப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊடக அனுசரணை உதயன் CHESS ENCOUNTER - 2008

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம், யாழ். இந்துக் கல்லூரி இன்ரக்ற் கழகத்துடன் இணைந்து நடத்தும்

மாவட்ட மட்டத்திலான, மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி

இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி. திகதி: 19,20/05/2008

நேரம்: காலை 8.30 இன்ரறக்ட் கழகம், சதுரங்கக் கழகம் - யாழ். இந்துக் கல்லூரி.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த விழுமியம் மிக்க தேசத்தை விரைந்து கட்டியெழுப்புவோம்!

## வெசாக் செய்தியில் ஜனாதிபதி உறுதிமொழி

கொழும்பு, மே 19

சிறந்த விழுமியங்கள் மிக்க தேசம் ஒன்றை விரைந்து கட்டியெழுப்புவோம் என்று தனது வெசாக் தினச் செய்தியில் உறுதி கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

வெசாக் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கைவாழ் அனைத்தும் பௌத்த மக்களுடனும் வெசாக் பண்டிகையை பக்தியுடனும் பற்றுடனும் கொண்டாடுவதில் நானும் இணைந்துகொள்கின்றேன்.

வெசாக் பண்டிகைக் காலத்தில் புத்த பெருமானின் போதனைகளுக்கமைய வாழ்வதே கௌதம புத்தருக்கு நாம் வழங்கக்கூடிய மிகப்பெரும் கௌரவம் என்பதை நாம் அறிவோம்.



சிறந்தவற்றை மதித்து நடப்பதன் மூலமே இவ்வுலகிலும் மறு உலகிலும் நாம் முன்னேற்றத்தை அடையமுடியும் என புத்தபெருமான் எங்களுக்கு வழிகாட்டியுள்ளார். அரசின் கொள்கை அந்த தர்ம போதனைகளுக்குக் கட்டுப் பட்டு சரியான வழியில் நாட்டை வழிநடத்துவதேயாகும். அவ்வாறு செய்யும்போது மற்றவரின் கருத்துகளை சகிப்புத்தன்மையோடு ஏற்று கருணை அன்புடன் நடந்து கொள்வதும் எமது பொறுப்பாகும்.

புத்த பெருமான் போதித்தது போன்று, 'எழுந்திரு, விழிப்பாக இரு, தர்மத்தை முழுவதும் கைக்கொண்டு ஒழுகு. தர்மப்படி நடக்கிறவன் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் சுகமடைவான்' (-தம்மபதம் அத்:13 வசனம் 168)

கருத்துவேறுபட்டு கடந்த காலத்தைத் தூற்றாமல் இருப்போம். சிறந்த விழுமியங்கள் மிக்க தேசமொன்றைத் தாமதமின்றிக் கட்டியெழுப்புவதற்காக நாம் செயற்பட வேண்டியுள்ளது.

எமது எதிர்பார்ப்பு எமது மக்கள் ஆயுதங்கள், எதிரிகள், கள்வர்கள் போன்றவற்றின் அச்சத்திலிருந்து நீங்கி அனைவரும் அமைதியுடன் வாழக்கூடிய வளமான நாட்டை எதிர்காலத்துக்கு விட்டுச் செல்வதாகும்.

அதற்காக தர்ம போதனைகளுக்குக் கட்டுப்பட்டு, சரியான பாதையில் செயற்படுவதற்கு இந்த வெசாக் தினத்தில் உறுதி பூணுவோம்.

இது புதியதோர் இலங்கையொன்றைக் கட்டியெழுப்புவதற்கான எமது செயற்பாடுகளுக்கு சிறந்த பலாபலன்களை எமக்குத் தரும்.

புத்த பெருமானின் இந்த சாந்திமிக்க பாதையில் சென்று இந்த வெசாக் தினத்தை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு நாம்உறுதி பூணுவோம்.

உங்கள் அனைவருக்கும் புத்த பெருமானின் ஆசி கிட்டுவதாக!

- என்று உள்ளது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### தருமராசா மயூரதி

கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா மயூரதி 15.05.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தருமராசா - கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் கதீசனின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2008) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளவாலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.* (74316)

### திருமதி சத்தியதேவன் ருக்குமணி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுழாவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியதேவன் ருக்குமணி 17.05.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-இராசம்மா தம்பதியினரின் அருமைப் புதல்வியும், அமரர்களான கிருஸ்ணசாமி, உமாதேவி, சிவலிங்கம், இராசையா, வள்ளிநாயகி, தசரதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ரூபராணி, ஜெயராணி, நளினி, யோகன், கலாலினி, சுபாஜினி ஆகியோரின் அருமைத் தாயும், கனகரட்ணம், காலஞ்சென்ற இராசதுரை, வாசுகி, நவலிங்கம் ஆகியோரின் மாமியாரும், மயூரன், பகிரதி, ஜெயராஜன், நிரூபராசன், பிரதீபராசன், சிந்துஜன், மீனலோஜினி, நிஷாந் தினி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், விஸ்ணுப்பிரியா, துஸ்ஸந்தி, கவிதா, கிருஸ்கரன், மகிந்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (19.05.2008) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகள் கலாலினி (காஞ்சனா)

*சுழாவடி,*
*ஆனைக்கோட்டை.* (74317)

### துரைச்சாமிகுருக்கள் குமாரசாமிசர்மா

(மெய்யான் ஐயா)



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனத்தை பிறப்பிடமாகவும், கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமிகுருக்கள் குமாரசாமிசர்மா அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2008) ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை கீரிமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கு.நகுலேஸ்வரக்குருக்கள் (கீரிமலை ஆதீனகர்த்தா), மனைவி, பிள்ளைகள்.

*இளவாலை வடக்கு,*
*இளவாலை.*
*060 2212440*

### சவுரிமுத்து அலெக்ஸ்சாண்டர் இராசநாயகம்



கரம்பன், செபஸ்ரியார் கோயிலடியை பிறப்பிடமாகவும், ஒட்டகப்புலத்தை வாழ்விடமாகவும் கொண்ட சவுரிமுத்து அலெக்ஸசாண்டர் இராசநாயகம் 16.05.2008 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவுரிமுத்து-லூர்த்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை றோசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஞானசவுந்திரியின் பாசமிகு கணவனும். மனோன்மணி(கனடா), காலஞ்சென்ற இராஜகாரியர் மற்றும் கெலிஸ் (கனடா), திருநாயகம் (நீர்கொழும்பு), அருமைநாயகம்(இந்தியா), துரைநாயகம்(லண்டன்), ஆகியோரின் சகோதரனும், ஜெசிற்றா (கனடா), வினிற்றா(பிரான்ஸ்), கிறிஸ்ரா(கனடா), அனிற்றா (கொழும்பு), தாரணி(கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், கலிஸ்ரன் (கனடா), ஆலாலதாசன் (பிரான்ஸ்), விக்டர்குமார் (கனடா), குமார்(கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், றொணி, சொபி, பிந்தி, றொனி, மரீனா, கொலின், ஏச்சியன், டிலு ஆகியோரின் பேரனும்மாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் கனடாவில் நாளை (20.05.2008) செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகள், மருமகன் அனிற்றா-குமார்

*இல, 236/5, 1/1, காலி வீதி,*
*வெள்ளவத்தை.* T.P.011 4956092 (74318)

## இணையத் தளங்களைக் குழப்ப கொழும்பில் தனி அலுவலகமாம்!

கொழும்பு, மே 19

இலங்கையிலிருந்து செயற்படும் செய்தி இணையத்தளங்களைக் கண்காணிப்பதற்கென அரசு புதிய அலுவலகமொன்றை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள 'லங்கா டி செண்ட்' என்ற இணையத்தளத்தின் அதிகாரியொருவர், குறிப்பிட்ட அலுவலகத்தைப் பயன்படுத்தி அரசு தமது இணையத்தள சேவைகளைச் செயலிழக்கச் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர ஊடக இயக்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் 'லங்கா டிசெண்ட்' செய்தி இணையத்தளத்தின் பேச்சாளர் ருவான் பேர்டினன்ட்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

### மிரட்டல்கள் விடப்பட்டன

கடந்த வெள்ளிக்கிழமை 'லங்கா டிசெண்ட்' செயலிழக்கச் செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இதனால் தம்மால் செய்திகளை வெளியிடமுடியாது போனதாகவும் தெரிவித்துள்ளார்.

'லங்கா டி செண்டின்' அதிகாரிகளுக்கு முதலில் மின்னஞ்சல் மூலம் மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகவும் பின்னர் இணையத்தளத்தின் செயற்பாடுகள் குழப்பப்பட்டதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஊடகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அரசின் முயற்சி எனவும் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னாள் உள்ள கட்டடமொன்றில் இணையத்தளங்களைக் கண்காணித்துக் குழப்புவதற்கு என அலுவலகமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வலிகாமம் கிழக்கில் 10 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே 19

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் நிக்கொட் நிறுவனத்தினால் 10 வீதிகள் திருத்தி புனரமைக்கப்பட்டவுள்ளன.

இவ்வீதிகள் திருத்துவதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அவை அனுமதிக்காக அனுப்பு வைக்கப்பட்டுள்ளதாக நிக்கொட் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (1-238)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தையா மகாதேவன்

கடந்த (21.04.2008) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா மகாதேவன் அவர்களின் மரணச்சடங்கின் போது, நேரில்வந்தும், தொலைபேசிமூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்-

இன்று (19.05.2008) திங்கட்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 21.05.2008 புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனநிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* இதனை தனிப்பட்ட அழைப்பாக யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்.

*84/6, தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (74319)


## VACANCIES IN BIO - MEDICAL TECHNOLOGY

A Leading Medical Diagnostics Company representing several Multinational Companies in Sri Lanka for medical equipments & reagents with an Island wide distribution & service network seeks for suitable personnel from the northern part of the Island to fill the below mentioned posts.

1.Engineer/ Technician (Electrical/ Mechanical/ Electronic)
2.Product Specialist (M.Sc in Bio Chemistry or B.sc in Bio Chemistry)
3.Qualified MLT

Age: Below 55 years
Salary: Negotiable
Terms of Employment: Full time/ Part time - retired persons can apply (should work minimum period of 3 years based in jaffna)

An opportunity exists for a dynamic and result - oriented individual to fill the above positions.

Apply within 10 days
316. NAWALA ROAD,
RAJAGIRIYA



அறவழிப் போராட்டக்குழு (NVDAG)

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட பற்றவைப்பு, தோல் பொருள் உற்பத்தி, நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் அலுமினியம் பொருத்துதல் பயிற்சிகளில் பயின்ற பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின்

## கண்காட்சியும் விற்பனையும்



காலம்: இன்று (19.05.2008) திங்கள்
நேரம்: முற்பகல் 11.15 மணி
இடம்: அறவழி தொழில் பயிலகம்

முதன்மை விருந்தினர்: திருமிகு.வே.ஜெயராஜசிங்கம் அவர்கள்
(பிரதி வெளிக்களப்பணிப்பாளர், கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனம்)
சிறப்பு விருந்தினர்கள்: லயன்.எஸ்.கே.நவரத்தினம் அவர்கள்
(அதிபர் -விமலாஸ், சாவகச்சேரி)
திருமிகு ஜே.வைகுந்தன் அவர்கள் (கதிரவன் இரும்பகம்)
திருமிகு.என். அருட் ஜோதி அவர்கள்
(அதிபர் -அமிர்தாம்பிகை வித்தியாலயம்)

இக் கண்காட்சியில் தங்களையும் பங்குபற்றி பயிலுனர்களின் ஆக்கத்திறன்களை பார்வையிட்டு ஊக்குவிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்
பயிலுனர்கள், போதனாசிரியர்கள்,
மற்றும் அறவழிப் பணியாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைதாரையும் வாழ வைக்கும் வைகாசி விசாகன் – அவனே முருகன்



*''அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய''*

பார்வதி பரமேஸ்வரனின் இளைய திருக்குமாரராக ஸ்ரீ முருகன் உலகமுய்யத் திரு அவதாரம் செய்தார். சூரனை வென்று, தேவர்கள் துயர் தீர்த்து, அடியவர்களைக் காத்துத் திருவருள் புரியச் சிவனது ஈசானம், வாமதேவம், தற்புருஷம், அகோரம், சத்யோ ஜாதம் என்று ஐந்து முகங்களுடன், கீழ் முகமாக இருக்கும் அதோ முகமும் சேர்ந்து சிவசக்தி வடிவமாக ஸ்ரீ சண்முகப் பெருமான் உதித்தார். சிவனாரின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றி, சரவணப் பொய்கையில் தவழ்ந்து, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டுப் பின்பு உலக அன்னை பார்வதி ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்து அணைக்க இப்படியே சண்முகப் பெருமான் அவதாரம் தொடங்கியது, ஓங்காரப் பிரணவ நாயகனாகிய ஒப்பிலாமணி, தெய்வசிகாமணி ஆகிய முருகன் தோன்றிய தினமே வைகாசி விசாகத் திரு நாள்.

கலியுக வரதன் மகாவரப்பிரசாதி, அழகே உருவானவன், இளமையே கோலமானவன், தன்னை அடைந்தோருக்குக் கற்பகத் தரு போல் அருள்பவன். ஞான சக்தியாகிய வேல் இன்றி முருகன் இல்லை. முருகன் இன்றி வேல் இல்லை. நம் அறியாமையை அகற்றி, மல இருளைக் கெடுத்து, ஞான ஒளியைக் கொடுத்து அருள் சுரப்பது சக்திவேல்.

வைகாசி விசாகன் வைதாரையும் வாழ வைப்பவன், காமனை எரித்த கனற் கண்ணில் இருந்து அருட்பெரும் ஜோதியாக வந்த, ஞானத்தின் உருவாகிய நாயகன், யாவர்க்கும் அருளுகின்ற கருணாமூர்த்தி நம்மிடம் யாராவது உதவிகேட்டால் ஒருமுறை மகிழ்ச்சியாகச் செய்வோம். இரண்டாவது முறை கேட்டால் செய்வோம். மூன்றாவது முறையும் கேட்டால் மூன்றாவது கண்ணைத் திறந்துவிடுவோம். ஆனால், கருணைக் கடலாகிய கந்தவேள் திரும்பத் திரும்ப நாம் வேண்டுதல்களை வைத்தாலும் கோபப்படுவதில்லை. பாவம் நம் பக்தர்கள். எங்கு போவார்கள் என்கிற பச்சாதாபம் மிக்கவன். கோபப் படத் தெரியாதவன்.

'மொழியும் அடியார்கள் கோடி குறை கருதினாலும் வேறு முனிய அறியாத தேவர் பெருமானே' என்று அருணகிரிநாதர் கோடி முறை குறை நீங்கக் கேட்டாலும் கோபம் வராது எம்பெருமானுக்கு எனப் பாடினார். 'முருகா' எனும் அந்தத் திவ்ய நாமத்தை மெய் உருக ஒருமுறை சொன்னாற் போதும். நம் மீது மகிழ்வு பூண்டு, அவனது தண்டைச் சிலம்பணிந்த சேவடி கமலங்களை நமது சென்னிமீது வைத்து ஆட்கொண்டருளுவான். ஆறுமுகக் கடவுளான அவன் கார்த்திகேயன், சுப்பிரமணியன், சரவணபவன், செந்திலாண்டவன், நல்லைக் கந்தன், சந்நிதிவேலன், கதிர்காமத்தையன் என்று பல்வேறு திருநாமங்களில் தரணி முழுவதும் கோயில் கொண்டுள்ளான். பேரழகனாய் காட்சி தரும் தமிழ்த் தெய்வம் முருகன் பெருமையைச் சொன்னால் நா இனிக்கும்.

உபாசனைக்குச் சிறந்த மூர்த்தி கலியுக வரதனாகிய சுப்பிரமணியப் பெருமானே. கொடியவர்களையும், ஒழுக்கக் கேடானவர்களையும் தடுத்தாட்கொள்பவன், தீராத நோய் தீர்க்க வல்லவன், பூத பைசாசங்களை விரட்டிக் காக்கும் மந்திரமணி, பேசாதவர்களைப் பேச வைக்கும் மூலிகை, கண் இல்லாதவர்களுக்குக் கண்ணளிக்கும் ஞான தீபம், ஆறு படை வீடுகொண்ட பரமன், விரும்பியவர்க்கு விரும்பியபடி தோழனாகவும், குழந்தையாகவும், குருநாதனாகவும் நின்று அருள் புரிகின்றான். தமிழ்த்தெய்வம் முருகன் அகத்தியருக்குத் தமிழைத் தந்தவன். தமிழ் மூதாட்டி ஔவைக்கு ஞானம் புகட்டியவன். அருண கிரிநாதரைத் தடுத்தாட்கொண்டு குரு மூர்த்தியாக வந்து உபதேசம் செய்தருளியவன்.

நக்கீரர் சிவபூசை செய்தபோது கற்கி என்ற பூதத்தின் மாயையினால் காற்றுக்கு விழுந்த இலைகளில், ஒரு இலை குளக் கரையில் பாதியும் நீரிற் பாதியுமாக விழுந்தது. நீரில் மூழ்கிய பகுதி மீனாகவும், மூழ்காத பகுதி பறவையாகவும் மாறின. மீன் பறவையின் கால்களைப் பற்றி இழுத்தது. பறவை இறக்கைகளைப் படபடவென அடித்தது: நக்கீரர் சிந்தனை கலையவே பறவை விடுபடுமா என பார்த்துக்கொண்டிருந்தார். உடனே கற்கிமுனி என்ற பூதம் வெளிப்பட்டு ''உன்னோடு ஆயிரம் பேராயிற்று'' என்று கூறி அவரை இழுத்துச் சென்று திருப்பரக்குன்றத்துக் குகையில் அடைத்தது. குகையிலிருந்த எல்லாச் சிவனடியார்களும் அழுதனர். நக்கீரரை நிந்தித்தனர் ஐயா! இந்தப் பூதத்தின் மாயையில் நீரும் அகப்பட்டுக் கொண்டீரா? சிவ பூசை செய்யும் இடங்களுக்குச் சென்று அடியார்களின் சிவ சிந்தையைக் குழப்பி இங்கே தூக்கி வந்து விடும் ஆயிரம் சிவனடியாரைப் பலியிட்டால் இதன் சாபம் நீங்கி நற்கதி கிடைக்குமாம். இன்று நாம் அனைவரும் மடியப் போகிறோமே என்றனர். நக்கீரர் அவர்களைத் தேற்றி ''உங்களுக்காவது சிந்திக்க நேரமிருந்தது. எனக்கு வந்த அன்றே மரணம் எல்லோருமாக சுப்பிரமணியரைத் ஸ்தோத்திரம் செய்வோம். கிரௌஞ்ச மலையைப் பிளந்து, சூரசம்சாரம் செய்து, தேவர் வினை களைந்தவன் நம்மையும் காப்பான்'' என்று கூறிக் கேட்போர் மனம் உருகத் திருமுருகாற்றுப் படையை பாடி நின்றார்.

''குன்றம் எறிந்தவனே! என் நெஞ்சத்தில் நீ வந்து அமர்ந்து கொள். அந்த இதயத்தை எந்த ஆயுதத்தாற் காயப்படுத்த முடியும்? உன் கையில் இருப்பது சக்தி வேலல்லவா? உன்னை ஒழிய வேறு ஒருவரையும் நான் நம்பவில்லை! நீ கை விட்டால் யார் அடைக்கலம் தருவார்கள்? உன் பன்னிரு கைகளினாலும் எங்களை அணைத்துக்கொள். சிவனை நினைத்தாலும் அவர் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட ஆறு பொறியான நீயும் என் நினைவில் வருவாய். என் உதிரமே உன் அபிஷேகப் பொருள். திருமுருகாற்றுப் படையே உனக்கான அர்ச்சனை மலர்கள். உன் தண்டைக் காற் சப்தம் கேட்கவில்லையே! அப்படியானால் நீ வர மாட்டாயா? சாகட்டும் என்று வேடிக்கை பார்க்கப் போகிறாயா?''

**இன்று வைகாசி விசாகத் திருநாள்**

அவ்வளவு தான் வேலின் பிரகாசம் குகைக்குள் வெளிச்சம் தந்தது. அடியார்களைப் பலிகொள்ள வந்த பூதத்தின் மேலும் ஒளி பாய்ந்தது. கற்கி முனி சாப விமோசனம் பெற்று வேலை வணங்கிக் கந்தர்வலோகம் சென்றது. வைகாசி விசாகனைப் போற்றி அடியார்கள் பணிந்தனர்.

ஸ்ரீ குமர குருபரர் ஐந்து வயதாகியும் வாய் பேசாதது கண்டு பெற்றோர் மனம் வருந்தித் திருச்செந்தூருக்கு வந்து கடலாடி ஒரு மண்டலம் விரதம் இருந்தனர். நாற்பத்தைந்தாவது நாள் புத்திரனுடன் கடலுக்குள் மூழ்கிவிடுவதென முடிவு செய்தனர். நாற்பத்திநான்காவது நாள் நள்ளிரவில் அர்ச்சகர் வடிவில் வந்த முருகப் பெருமான், குமர குருபரரைத் தட்டி எழுப்பி அவரது நாவிற் சடாசரத்தை எழுதிக், 'குழந்தாய் ! விரைவில் நமது விஸ்வரூப தரிசனம் காண வா' என்றருளி மறைந்தார். குமர குருபரர் பெற்றோரைத் தட்டி எழுப்பி அம்மா! அப்பா! என்று நடந்ததைக் கூறினார். புத்திரன் பேசுவதைக் கேட்ட மகிழ்ச்சியில் அவர்களுக்குப் பேச்சே வரவில்லை. மூவரும் செந்தில் ஆண்டவர் சந்நிதிக்குச் சென்று விஸ்வரூப தரிசனம் கண்டு மகிழந்தனர். கந்தர் கலிவெண்பா, நீதி நெறி விளக்கம், மீனாட்சி அம்மை, பிள்ளைத் தமிழ் ஆகிய பொக்கிஷங்களை திருவாய் மலர்ந்தருளினார். ஸ்ரீ மினாட்சி அம்மன் சந்நிதியில் திருமலை நாயக்கர் மடியில் பெண் குழந்தை வடிவில் அமர்ந்திருந்த மீனாட்சி, 'தொடுக்கும் கடவுட்பழம் பாடல்' என்ற பாடலைக் குமர குருபரர் பாடி முடித்த போது கழுத்தில் இருந்த முத்துமாலையைப் பரிசாக அளித்தாள்.

ஞான பண்டிதனாகிய தமிழ் குழவி ஞானத்தாயாகிய தமிழ்க்கிழவி ஔவையாரிடம் ''சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா'' என்று வினவித் தேவரும் மூவரும் காணாத பன்னிருகைப் பரமன் தனது திருக்கோலக் காட்சியைக் காட்டிக் கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உல களவு என்ற உண்மையை உணர்த்தி ஔவையாரிடன் இனியது எது கொடியது எது அரியது எது பெரியது எது என்று வினவி நமக்கெல்லாம் இனிய தமிழில் விடை பகர வைத்து உண்மையை உணர்த்தியுள்ளான்.

ராமலிங்க வள்ளலார் ஆறுமுகப் பெருமான் திருவருளால் ஞானசுத்தியும் சாகா கலையும் அறியப் பெற்றார். பாம்பன் சுவாமிகள்குதிரை வண்டியேறி கால் முறிந்து மருத்துவர்களால் கைவிடப்பட்ட போது அவரின் சீடர் சண்முக கவசத்தை தினமும் பாராயணம் செய்ய முருகனே வந்து அவர் கால்களின் வேல் வைத்துக் கட்டி மருத்து வர்கள் அதிசயிக்கும் வண்ணம் குணப்படுத் தினார். பாம்பன் சுவாமிகள் அருளிய பஞ்சாமிருத வண்ணத்தை எங்கெல்லாம் பக்தர்கள் பாடுகிறார்களோ அங்கெல்லாம் நான் இருந்து கேட்பேன் என செந்தூரின் வள்ளல் கூறி[illegible]ளார். பகழிக் கூத்தர் என்ற வைஷ்ணவப் பெரியார் சூலை நோயால் துடித்தார். ஒரு கோடி முத்தம் தெள்ளித் தெளிக்கும் க[illegible]ற் செந்தில் நகரை அடைந்தார். ஆறுமுகப் பெருமா[illegible]ின் அருட் கோலத்தைக் கண்டு ஆனந்தப் பரவசமானார். உள்ளமுருகித் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பாடினார். ''பேராதரிக்கும் அடியவர்'' என்று தொடங்கி வாராதிருக்க வழக்குண்டோ என்று அடித்துக் கேட்கிறார் பிள்ளைத் தமிழ்பாடி முடிந்ததும் சூலைநோய் நீங்கியது. அந்த வைகாசி விசாகனின் அற்புதங்கள், ''சொல்லமுடியுமா? சொல்லில் அ டங்குமா?'' அந்த கலியுகத்து மகா வரப்பிரசாதியை கரம் குவித்து வணங்குவோர்க்கு கலியின் கொடுமையும் யமபயமும் கிடையா. உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்கிப் பக்தர்களின் அகத்திற்கும் புறத்திற்கும் தரிசனம் தந்து அவர்கள் வேண்டும் வரங்களை எல் லாம் கொடுக்கும் தெய்வம் மெய்யான தெய் வம் கண்கண்ட தெய்வம் அவனது திரு வடிகளை நினைத்தாற் போதும் உடனே அவனது திருமுகம் மகிழ்ச்சியால் மலர்ந்து விடும். ஆகவே வைதாரையும் வாழ வைக்கும் வைகாசி விசாகனை வழிபட்டு சகல போகங்களும் பெற்று வாழ்வோமே.

**ல- சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்.**

(நன்றி: ஞானச் சுடர்)

*''உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரை யான்பின் செல்லேன்
பன்னிருகைக் கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்த
வேலப்பா செந்தில் வாழ்வே''*

# போதனா வைத்தியசாலையின் முன்னாலுள்ள நடைபாதை தொடர்ந்தும் வியாபாரிகள் வசம்

யாழ்ப்பாணம்,மே.19

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னுள்ள நடைபாதையில் வியாபாரம் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் தொடர்ந்தும் அப்பகுதியில் வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகப் பாதசாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போதனா வைத்தியசாலையின் முன்னால் உள்ள நடைபாதை பல காலமாக வியாபார நடவடிக்கைக்காக நடைபாதை வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் பாதசாரிகள் சிரமங்களுக்கு மத்தியில்வீதியாலேயேபயணம்மேற்கொண்டு வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு யாழ். மாநகர சபையினரால் அப் பகுதியிலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

எனினும் இன்று வரை அப்பகுதியிலிருந்து சில வியாபாரிகள் வெளியேறாமல் தொடர்ந்தும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தொடர்ந்தும் பாதசாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (202-302)

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மைதானம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

சுழிபுரம். மே 19

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கென வேள்ட் விசன் நிறுவனம் 7 இட்சத்து 14 ஆயிரத்து 640 ரூபா நிதியுதவி செய்துள்ளது. அத்துடன் விஸ்தரிப்புக்கான காணியைக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது.

இதற்கமைய விளையாட்டு மைதான விஸ்தரிப்பு வேலைகள் நிறைவு பெற்று கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக வேள்ட்விசன் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்டமிடல் அலுவலர் செல்வி ரமின்னமற, கனிஷ்ட திட்டமிடல் அலுவலர் செல்வி அனுசகா, யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். வசந்தநாயகம், பழையமாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (202-28)



யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இதய சிகிச்சை விடுதியின் திறப்புவிழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிரேஷ்ட பிரதம வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.நாகேந்திரா புதிய விடுதியை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் அரச அதிபர் கே.கணேஷ் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இதய சிகிச்சை நிபுணர் பி.லக்ஷ்மன் ஆகியோருடன் ஏனைய விருந்தினர்கள் விடுதியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்து




திரு.திருமதி திலீப் - நுஷ்யந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி தி.காருஜா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (19.05.2008) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் வாழ இனிதே வாழ்த்துவோர்:

பொற்பதி வீதி, கொக்குவில். (சி/552901) — நாச்சிமார் கோயிலடி கமலநாதன் குடும்பம் (அம்மப்பா), ஆனைக்கோட்டை லோகேஸ்வரன் குடும்பம் (அப்பப்பா).

## கண்ணீரில் நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 ✱ 01 ✱ 1945 |  | 15 ✱ 05 ✱ 2008 |


மாவை ஆதீனத்தைச் சேர்ந்த

### துரைசாமிக் குருக்கள் குமாரசாமி சர்மா

கள்ளமில்லா வெள்ளை உள்ளம்! கபடமற்ற கவர்ச்சியான பேச்சு!
நிறைமதியெனமுகம்! குறைவிலா அறநெறி தவறாத அந்தண வாழ்வு!
ஆண்டவன் சேவையே அவர் வாழ்நாளில் அவரது மூச்சு!
நெஞ்சடைப்பால் சங்கரன் மைந்தன் தாள் சேர்ந்தார்!
நாமும் அதுவழியே தானென நினைத்து நமது மனதைத்
தேற்றி அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர் — பிரம்மஸ்ரீ ச.கு.சுதர்சனக் குரு (J.P.), பிரதமகுரு, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், புலோலி P.O.,
சிவன்கோயிலடி, ஆவரங்கால். (72313)

## ஆறாத் துயருடன் அகவை ஒன்றில்



அமரர்
### பொன்னையா நவரத்தினம்
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்
25 ✱ 08 ✱ 1925

மறைவு
31 ✱ 05 ✱ 2007

திதி: விசாகம் (19.05.2008)

அன்பும் உள்ளமும் ஆதரவும்
இன்முகம் காட்டும் ஈகைப் பண்பும்
உண்மையில் உயர்வும் ஊரறியும் உத்தமரும்
கடமையில் கண்ணியமும் நட்பில் நகைச்சுவையும்
நிறைந்த (நவ)ரத்தினமே!
உயிர்நீத்த உடலையும் மருத்துவக் கல்விக்கு அர்ப்பணித்தீர்
என்றுமே நீங்கள் இறைவன் நிழலிலே.....

ஆறாத்துயருடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பிரதான வீதி, சங்கானை. (74231)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை (சுகணா) கதிராசிப்பிள்ளை



திருமதி கணபதிப்பிள்ளை (சுகணா) கதிராசிப்பிள்ளை 17.05.2008 சனிக்கிழமை அமரரானார்.

'அண்ணா இல்லம்' அல்வாயைச் சேர்ந்த 24.04.2008 இல் அமரத்துவம் அடைந்த கணபதிப்பிள்ளை (சுகணா) அவர்களின் அன்பு மனைவியும் நாகலிங்கம் -பாறுபதியின் மகளும் சுப்பர் - தெய்வானையின் மருமகளும் தமிழழகன், பூங்கோதை, தமிழ் மலர், வள்ளுவன் (அமரர்), மணிமேகலை, கனிமொழி, கணேசானந்தம், ஆகியோரின் பாசமிகு தாயும் திருவருட்சோதி, சகுந்தலாதேவி, விமலாதேவி, தவமணிதேவி, சுசீலாதேவி ஆகியோரின் சிறியதாயும் அமரர்களான வள்ளிப்பிள்ளை, பசுபதி, தினகரிப்பிள்ளை, கந்தவனம், தங்கம்மா, சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம், பரமேஸ்வரி, மீனாட்சியம்மா ஆகியோரின் மைத்துனியும் ஜெயராணி, சச்சிதானந்தம், பாஸ்கரன், செல்வரட்ணம், பரமேஸ்வரன், மலர்ச்செல்வி ஆகியோரின் மாமியும் கனகம்மா, அமரர் கணபதிப்பிள்ளை, கனகசபை (அமரர்), சதாசிவம் (அமரர்), சந்திரசேகரம் ஆகியோரின் சகோதரியும், தர்ஷினி, குமணன், சத்தியன், சங்கர், சந்துரு, சங்கீதன், தீபன், திலீபன், நோர்சன், மீரா, மிதுலா, சுஜீவன், ஜனனி, யாழினி, கபிலன், தனுஷன் ஆகியோரின் பேர்த்தியும், றிஷா, றியானா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2008) திங்கட்கிழமை அண்ணா இல்லத்தில் காலை 7 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அல்வாய். (சி/552899)

## கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்,மே19

அறவழிப் போராட்டக்குழு கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய பயிற்சிகளில் பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு அறவழி தொழில் பயிலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவன பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே. ஜெயராஜசிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

## மாலை கோர்த்தல் திறன்விழா

சுழிபுரம்,மே19

வலிகாமம் மேற்குப் பிரேதச முன்பள்ளிச் சிறார்களின் மாலை கோர்த்தல் திறன் விழா நாளை செவ்வாய்க்கிழமை கலை 9 மணிக்கு வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்க மண்டபத்தில் செல்விநா.நிரஞ்சனா தலைமையில் நடைபெறவுள்ளது. (203-28)

## உதவிப்பணக் கோடுப்பனவு

வலி.தென்மேற்கு, மே19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்களுக்கு இந்த மாதத்திற்கான கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் அந்த அந்த தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுள்ளது.

காசநோய், புற்றுநோய் மற்றும் தொழுநோய் ஆகிய நோயாளர்களுக்கான கொடுப்பனவும் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.(203-135)

## கூட்டங்கள்

வலி.தென்மேற்கு, மே19

வலிதென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயல்க பிரிவு விவசாயக் குழு கூட்டமும் பிரதேசஒருங்கிணைப்பு குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் பிரதேச செயலர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (203-135)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மே19

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (203)





DLF IPL CRICKET OFFER
ஜூன் 4 வரை மட்டும்
DISH TV package ரூபாய் 9000/= இருந்து (6 மாத இலவச சந்தாவுடன்)

★ DISH TV இற்குரிய கட்டணங்கள் செலுத்தி ஒரு மணி நேரத்தில் Activate செய்து கொள்ளலாம்.
★ DISH TV ரிசீவருக்குரிய அனைத்து Software களும் மாற்றிக் கொள்ளலாம்
★ மற்றும் கேபிள் TV க்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் கிடைக்கும்.
★ உங்கள் கேபிள் நெட் வேர்க் சம்பந்தமான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.



மேலதிக விவரங்களுக்கு:
SATS-TECH ENGINEERS
இல.182,கே.கே.எஸ்.வீதி,குளப்பிட்டி சேச் அருகில்,கொக்குவில்.
(74309) Phone :- 222 5908 / 0777 710785


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல் -2008

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகை சார்பில் 01.06.2008 தொடக்கம் 31.12.2008 வரையான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 30.05.2008ஆம் திகதி நண்பகல் 12மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் 30.05.2008ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கமுடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் பணமாகச் செத்துவதன் பேரில் வழங்கப்படும். கேள்விகள் அன்றைய தினம் (30.05.2008) பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும். கேள்வித் தொகையுடன் மேலதிகமாக 15% பெறுமதிசேர்வரியும் (வற்வரி) செலுத்தப்பட வேண்டும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 40250/= | 1000/= | 100/= |

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
15.05.2008 (சி/552886)

கு.அமிர்தலிங்கம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

## ஈரவிழிகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலி



எம் பாசத்தின் உறைவிடமே!
அன்பின் பிறப்பிடமே!
அழகுக்கோர் இலக்கணமே!
எங்கே மகளே உன் சிரித்தமுகம்?
மழலை மொழிபேசி அனைவரையும்
உன்பால் கவர்ந்திழுக்கும் எம் செல்வமே இந்துஜா!
காலனவன் உன்னை எமை விட்டுப் பிரித்து விட்டான்
மாதமொன்று சென்றாலும் எம் மூச்சு உள்ளவரை
உன் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

எமது அன்புச் செல்வத்தின் உயிர் பிரிந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (19.05.2008) திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்தி நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா சற்குணராசா குடும்பம், அன்பு அண்ணா அருண்ராஜ் - லண்டனில் வசிக்கும் பெரியமாமா பரஞ்சோதி குடும்பம், சுரேஷ் மாமா குடும்பம், குட்டி மாமா சுதாகரன் குடும்பம், அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார்.

நந்தவனம்,
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

### செல்வி இந்துஜா விஜயகுமார்

அன்னை மடியில் 27.06.2003 — இறைவன் இல்லத்தில் 19.04.2008
(54109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுமதில், மைதானம், மின்சாரம், நூலகம் எதுவுமில்லை; வளங்கள் யாவும் பற்றாக்குறை என்றாலும் சீராக நடைபெற்றுவரும் பாடசாலை


சித்தியடைந்த மாணவி சி. திவ்வியா

## காரை மெய்கண்டான் வித்தியாலயம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

சைவமும் தமிழும் செழிப்புற்று விளங்கும் காரைநகர் பிரதேசத்திலுள்ள பதினான்குப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவது காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயமாகும். இவ் வித்தியாலயம் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ளது.


பாடசாலையின் முகப்புத் தோற்றம்
மெய்கண்டான் பாடசாலை

மாணவர்களின் கல்வி மற்றும் சமய கலை கலாசார முன்னேற்றத்திற்காக 1925 ஆம் ஆண்டு காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட உமாபதி உபாத்தியார் அவர்களினால் 40 மாணவர்களுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மெய்கண்டான் வித்தியாலயம் ஆரம்பிக்கும் போது பாடசாலையானது மண் நிலமும் கூரை ஓலையினாலும் வேயப்பட்ட கொட்டிலாகக் காணப்பட்டது.

1940 ஆம் ஆண்டு முதல் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட உ. கார்த்திகேசு அதிபராகவும் 1950 ஆம் ஆண்டு முதல் பேரம்பலம் வாத்தியாரும், 1970 ஆம் ஆண்டு முதல் திருவாளர் கனகசுந்தரமும் 1976 ஆம் ஆண்டு முதல் களபூமியைச் சேர்ந்த கந்தையா வாத்தியாரும் அதிபர்களாகக் கடமையாற்றி வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்துள்ளனர்.

இதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைச் செயற்பாடுகள் இன்றி மூடப்படும் வரை திரு.கி.சிவமணி அதிபராகக் கடமையாற்றினார். இடப்பெயர்விற்கு முன்னர் 225 மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர்.

தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையான இவ் வித்தியாலயத்தை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தரம் 8 வரை நடாத்துவதற்கும் இடைநிலைப் பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

''இளமையில் கல், கற்றாங்கு ஒழுகு'' என்பது இப்பாட சாலையின் மகுட வாசகமாகும்.

ஓலைக் கொட்டிலாக ஆரம்பிக்கப் பட்ட இப்பாட சாலை காலப்போக்கில் மூன்று நிரந்தரக் கட்டிடங்களாக வளர்ச்சியடைந்துள்ளது. 1991 இல் மக்களின் இடப்பெயர்வினால் மூடப்பட்ட பாடசாலை 1996 இல் மக்கள் மீளக்குடி யமர்ந்த போதிலும் ஆரம்பிக்கப்படாமலேயே இருந்து வந்தது. இதனால் இவ்வூரில் உள்ள மாணவர்கள் நீண்டதூரம் சென்று யாழ்ற்றன் கல்லூரியின் கனிஷ்ட பிரிவிலும், சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் கல்வி பயின்று வந்தனர். இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

**மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பம்**

பெற்றோரின் தொடர்ச்சியான கோரிக்கையாலும் அப்போது உதவி அரசாங்க அதிபராக




இருந்த ஜே. எக்ஸ். செல்வநாயகம் எடுத்த பெரும் முயற்சியினாலும் இப்பாடசாலை மீளவும் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி மீளவும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திருமதி புஸ்பராணி சந்திரராசாவை அதிபராகக் கொண்டு மீள ஆரம்பிக்கப்பட்டபோது நடைபெற்ற மீள் திறப்பு விழாவின் அப்போதைய இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய வே. எக்ஸ். செல்வநாயகம் தீவகவலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ப. விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பாடசாலையை மீள ஆரம்பித்து வைத்தனர்.

**வலய கோட்ட மட்ட போட்டிகளில் ஆர்வம்**

மீளவும் 25 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயத்தில் தற்போது 75 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராசா அவர்களுடன் நான்கு நிரந்தர ஆசிரியர்களும் இங்கு கல்வி கற்பித்து வருகின்றனர். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக சைவபரிபாலன சபை மற்றும் காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் சமயபாடப் பரீட்சைகள், வலய மட்ட மற்றும் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றிலும் பங்கு பற்றி மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக் கொணர்கின்றனர்.

5 தரப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் ஆண்டு தோறும் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். 2003 ஆம் ஆண்டு 13 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி எஸ். ஐங்கரன் 126 புள்ளிகளையும் பு. தர்சினி 124 புள்ளிகளையும் கே. சுகன்யா 119 புள்ளிகளையும் பெற்றுச் சித்தியடைந்தனர்.

2004 ஆம் ஆண்டு 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இரண்டு மாணவர்கள் நூறிற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். 2005 ஆம் ஆண்டு 10 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியதில் மூன்று மாணவர்கள் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டதுடன் எஸ். கேசவன் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார்.

2006 ஆம் ஆண்டு 11 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 8 பேர் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டதுடன் கே. கவிதா 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார். கடந்த ஆண்டு (2007) வெடியரசன்வீதி காரைநகரைச் சேர்ந்த செல்வி திவ் வியா சிவராசா 144 புள்ளிகளைப் பெற்று சிறப்பாக சித்தியடைந்தார். இவ்வாறு ஆண்டு தோறும் மாணவர்களின் கல்வித்தரம் இங்கு வளர்ச்சியடைந்து வருகின்றது.

**விளையாட்டு மைதானம் இல்லாத குறை**

வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் உமாவதி,காந்தி,பாரதி ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பாடசாலை விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப் படாமல் உள்ளதால் அனேகமான போட்டிகள் சிவகாமி அம்மன் ஆலய முற்றலிலேயே இடம் பெறுகின்றது. இப் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாமை மிகப் பெரிய குறையாகவே இருந்து வருகின்றது.

2002 ஆம் ஆண்டு போரூட் நிறுவனத்தினால் மலசல கூடமும் 2003ஆம் ஆண்டு நிக்கோட் நிறுவனத்தால் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடமும் 2006ம் ஆண்டு உலக உணவுத்திட்டத்தினால்சமயலறை, கிணறு, மாணவர்களுக்கான மலசல கூடம் என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இப் பாடசாலையில் இன்றைய நிலையில் மற்றைய இடத்துப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது காலத்திற்கேற்ப கல்வியை வழங்குவது சிரமமாகவே உள்ளது. மின்சார வசதி, நூலக வசதி, விளையாட்டு மைதானம், பாடசாலை வளாகத் திற்கு சுற்று மதில் இன்மை மற்றும் பாடசாலை அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வது என்பன மிகப்பெரும் குறையாகவே உள்ளது.

மேற்சொல்லப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாணவர்களுக்கு கணனி அறிவினைப் புகட்டு வதற்கு கணனிகளும் பெற்றுக் கொடுக்கப்படின் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மேலும் விருத்தியடையும் என வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராசாவும் ஆசிரியர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

- பர்விகன் -

---

### ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி
## ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி. முதலாம் இடத்தைத் தட்டிச் சென்றது

வலி.வடக்கு, மே19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்ளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் வலிகாமம் கல்வி வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றன.

முதல் சுற்றில் ஏழு பாடசாலைகள் கலந்து கொண்டன. இரண்டாவது சுற்றில் நான்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன.

இப் போட்டியில் முதலாம் இடத்தை ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும்,2ஆம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும்,3ஆம் இடத்தை சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயமும்,4ஆம் இடத்தை நவாலி மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

(50-86)

## வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தடவையாக எல்லே போட்டி

வலி.வடக்கு, மே19

வலிகாமம் கல்வி வலயம் பாடசாலை அணிகளுக்கு இடையே முதல் தடவையாக இடம்பெற்றுகின்ற எல்லோ விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் முதல்தடவையாக வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இப்போட்டி இடம் பெறுகின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இப்போட்டியில் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலை அணிகள் நேரடியாக வலய மட்டத்தில் விளையாடவுள்ளன.

16 பாடசாலை அணிகள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

(1-86)

## மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே கரப்பந்தாட்டப் போட்டி

வலி. வடக்கு ,மே.19

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 8.30மணி முதல் திருநெல்வேலி முத்தட்டி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

15, 17, 19 வயதுப்பிரினர்களுக்கு இடையேஇப்போட்டிகள்இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (203-86)

## வலிகாமம் வலய மேசைப்பந்தாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்!

வலி. வடக்கு,மே 19


வலிகாம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் விறு விறுப்பான முறையில் மோதிக்கொண்ட போதிலும் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றியை தனதாக்கி வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

(50-86)




## தீவகத்தில் வியாழன் உடற்பயிற்சிப் போட்டி

வலி. வடக்கு ,மே.19

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இப் போட்டியில் நெடுந்தீவு , ஊர்காவற்றுறை, வேலணைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

(1-86)


யாழ்.றோட்டறிக்கழகமும் யாழ்.நகர்மைய றோட்ரக்ட் கழகமும் இணைந்து உரும்பிராய் பிரதேசத்தில் உள்ள நான்கு முன்பள்ளி[illegible] விளையாட்டுப் போட்டிகளை நடத்தின. சிறுவர் சிறுமிகள் விளையாட்டில் ஈடுபடுவதையும் [illegible] கைலாகு கொடுத்து வரவேற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# MATHURAM INSTITUTE

DUTCH ROAD IRUPALAI KOPAY

## ஆசியுரை



மது கல்வி நிறுவனம் மதுரம் இன்ஸ்ரிரியூட் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கல்விப் பணியாற்ற முனைந்திருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறோம். க.பொ.த. சா/தா பரீட்சையில் இவ்வருடம் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிப்பது மாணவர்களை ஊக்கப் படுத்தும் ஒரு செயலாகும். மதுரம் இன்ஸ்ரிரியூட் பல்லாண்டு காலம் வளர்ச்சி அடையவும் இதற்காகப் பணியாற்றிவரும் ஆசிரியர்களையும் இயக்குநரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
*இரண்டாவது குரு மகா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

## இலாபநோக்கின்றிச் சேவையாற்றும் நிறுவனம்



இன்றைய சமகாலக் கல்வி போட்டிகளும், சவால்களும் நிறைந்த தாகக் காணப்படுகின்றது. இதற்கு பாடசாலைக் கல்வியுடன் ஏனைய மாண வர்களுக்குக் கிடைக்கக்கூடிய கல்வி வளங்களையும் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. இவ்வகையில் இருபாலைக் கிராமத்தில் கடந்த பல வரு டங்களாகக் கல்விச் சேவை ஆற்றிவரும் மதுரம் கல்வி நிறுவனம் மாண வர்களுக்கு நல்ல வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகின்றது. இங்கு பல நூற்றுக்கண்கான மாணவர்களுக்கு முப்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பித்து வரு கின்றனர்.

இலாப நோக்கை மட்டும் பாராமல் ஏழை வறிய மாணவர்களுக்கு இலவசமாகவும் சலு கைக் கட்டணங்களுடனும் இந்த நிறுவனம் கல்விச் சேவை ஆற்றி வருவது பாராட்டத்தக் கது. வறுமை என்ற காரணத்தினால் தமது கல்வி உரிமையை இழந்து நிற்கும் இவ் வகை மாண வர்களுக்கு கல்வி ஒளியூட்டும் செயன்முறை மிக உன்னதமானதாகும். இன்றைய காலத் தின் தேவையாகவும் இது உள்ளது. இந் நிறுவனத்தில் பயின்ற க.பொ.த. சாதாரணதர பரீட்சை எடுத்த மாணவர்கள் 90 வீதத்துக்கும் மேல் சித்தியடைந்துள்ளனர். 5ஆம் தர புல மைப்பரீட்சையில் கடந்த ஆண்டு 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

இருபாலைக் கிராமத்தில் இயங்கும் மக்கள் நலன்காக்கும் பிரிவு, பாசச்சோலை, அன்னை திரேசா ஆகிய பொதுச் சேவை நிறுவனங்களிலுள்ள ஆதரவற்ற மாணவர்களுக்கும் கல்விச் சேவையாற்றி வருகின்றது. பொதுவாக இப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவேண்டி யுள்ளதாலும் மக்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்ச்சிகள் தேவை என்பதாலும் மதுரம் நிறுவனத்தின் கல்விச் சேவை மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

எஸ்.கே.யோகநாதன், *பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசியற் கல்வியியற் கல்லூரி.*

## வாழ்த்துச் செய்தி



'மது கல்வி நிலையம்', 'மதுரம் இன்ஸ்ரிரியூட்' என்ற பெயர் மாற்றத் துடன் நடத்த இருக்கும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கப் பாடசாலைகளுக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டி வரும் தனியார் கல்வி நிறுவனங் களது சேவை அளப்பரியதாகும். அதுவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கும் யாழ்ப்பாண மாணவர்கள் தமக்கான முழுப் பாடத் திட்டத்தையும் பூர்த்திசெய்து பரீட்சைக்குத் தயார்படுத்தும் பெரும் பொறுப்பை தனி யார் கல்வி நிலையங்களே பூர்த்திசெய்யமுடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள்.

இக்கல்வி நிலையத்தின் அதிபர் திரு.கே.கிருபாகரன் அவர்கள் பட்டதாரி என்பத னால் மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதில் தனக்கென ஓர் ஆளுமையைக் கொண்டுள்ளார். கல்வியின் ஊடாகவே ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கை கொண்ட அவர் மாணவர்களது கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிக அக்கறை கொண்டவர் என்பதை நானறிவேன். இங்கு கற்கும் மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆகிய பொதுப் பரீட்சைகளில் சாதனை படைக்கவேண்டும் என்ற உயர் சிந்தனையுடன் பணியாற்றுபவர். அதன் காரணமாகவே மாணவர்களைத் தூண்டும் நோக்குடன் அவரால் கௌரவிப்பு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவரது இந்நன்முயற்சி தொடரவேண்டுமென வாழ்த்துவதுடன் மதுரம் இன்ஸ்ரிரியூட் வட பகுதியில் முன்னணிக் கல்வி நிறுவனமாகத் திகழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

க.தேவராஜா, *பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்*

## மேலும் சாதனைகளை நிலைநாட்டவேண்டும்



டச்சு வீதி, இருபாலை, கோப்பாய் என்ற முகவரியில் கடந்த 10 வருட காலமாக இயங்கி வரும் மது கல்வி நிறுவனம் இன்று முதல் மதுரம் இன்ஸ்ரிரியூட் என்ற நாமத்துடன் இயங்கவுள்ளமை மகிழ்வைத் தருகிறது. கடந்த 10 வருட காலமாக கோப்பாய் மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக அர்ப் பணிப்புடன் செயற்பட்டு பல சாதனைகளை நிலை நாட்டியது போல எதிர் காலத்திலும் சாதனைகள் நிலைத்நிறுத்தவேண்டுமென்று வாழ்த்துகின் றேன். கோப்பாய் வாழ் மக்களின் கல்வித்தரம் குறைந்துவிட்டதாக ஆய்வுகள் பலவும் கூறு கின்றன. கோப்பாய் பாடசாலைகளில் கல்வி கற்கவேண்டிய கோப்பாய் மாணவர்கள் பிரபல பாடசாலைகளை நோக்கிப் பெரும் படை எடுத்துச் சென்று கல்வி கற்று அறிஞர்களாகின்ற னர். பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் கணக்கெடுத்துப் பார்த்தால் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய கோட்ட மாணவர்களை விட பிற கோட்டங்களைச் சேர்ந்த மாணவர் களே அதிகம் சித்தியடைந்தமை புலனாகும். 2007ஆம் ஆண்டு மது கல்வி நிறுவனத்தில் பரீட்சை எடுத்த 41 மாணவரில் 36 பேர் A/L படிக்கத் தகுதி பெற்றனர். இதில் சிறந்த பெறுபேற் றைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இதன் நிர்வாகி புலவர் கே.கிருபா கரன் முன்னைய வருடங்களை விடச் சிறப்பாக நடத்தி கோப்பாய்ப் பகுதி மக்களின் கல்வி யறிவை மேம்படுத்த வாழ்த்துகின்றேன்.

கே.வி.குணசேகரம், *கோட்டக்கல்விப்பணிப்பாளர், நல்லூர் கோட்டம்.*

## கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் முக்கியத்துவம்



மதுரம் இன்ஸ்ரிரியூட் பாடசாலைக் கல்விக்கு ஏற்றவாறு மாணவர்களுக்கு கல்வி ஊட்டி வருகின்றது. கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. க.பொ.த. சா/த, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் மாணவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். சாதனையாளர்கள் கௌரவிக் கப்படும் இந்நாளில் இம்மாணவர்கள் மேலும் சிறக்கவும் நிறுவனம் கல் விக்கான பங்களிப்பை மேம்படுத்தவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

இ.இராஜசேகரம், *அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*


## பிள்ளைகளின் கல்வியிலே கூடிய அக்கறை



இன்றைய உலகம் அறிவுசார் சமூகத்திற்கு உரியது. எனவே தனி மனி தனதும் சமூகத்தினதும் சுபீட்சம் அறிவின் அடிப்படையிலானது. அதனால் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. இதனை உணர்ந்த சமுதாயம் பிள்ளை களின் கல்வியிலே கூடிய அக்கறை கொள்கிறது. அதன் விளைவாக பாட சாலைக் கல்வியுடன் மட்டும் பெற்றோர்கள் திருப்தி அடைவதில்லை; தனி யார் கல்வி நிறுவனங்களை நாடிச்செல்கின்றனர். எனவே பெற்றோர் களின் இந்த அபிலாசைகளைப் பூர்த்திசெய்வது தனியார் கல்வி நிறுவனங்களின் கடப் பாடாகும். இந்நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு ஒத்த தரத்திலான ஆளணியினரையும் கட் டுப் பாடுகளையும் பௌதீக வளங்களையும் தன்னகத்தே கொண்டிருத்தல் அவசியமாகும். இந்நிலையில் இந்நிறுவனங்களும் பாடசாலைகளும் ஒன்றிணைந்து செயற்படும் நிலை உருவாகலாம். இவ்வகையான ஒரு நிலையினை உருவாக்கும் தகுதியினை மதுரம் இன்ஸ்ரி ரியூட் அடையக்கூடிய நிலையில் உள்ளமையையிட்டு நிறுவன அதிபர், ஆசிரியர்கள், அனு தாபிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன்.

அ.பஞ்சலி[illegible]

## நிறுவன நிர்வாக இயக்குநர் S.K.கிருபாகரன் (B.A.) அவர்களின் செய்தி



கடந்த ஆறு ஆண்டு காலமாக இந்நிறுவனத்தை பொறுப்பேற்று நடத்தி வருகின்றேன். இக்காலப் பகுதியில் எமது நிறுவனம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கு காரணம், நாம் மாணவர்களின் உளநிலையை புரிந்தும் பெற்றோர் இடர்களையும் எதிர்பார்ப்புகளை யும் தெரிந்தும் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டிற்கு இசைந்தும் சமூக அறிஞர் வழிகாட்டலை ஏற்றும் சமூ கத்தோடு ஒன்றியும் தரமான ஆசிரியர் மூலம் நவீன கற் றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கேற்ப மாணவ சமூ கத்தை வழிகாட்டுவதே.

எமது நிறுவனம் தலை நிமிர்ந்து சேவையாற்றுவ தற்குக் காரணம் சமூகத்தில் இருக்கின்ற கௌரவமான பெற்றோரின் ஒத்துழைப்பே. நாம் தனியே இலாப நோக்கின்றி சேவை நோக்கையும் கருத்திற் கொண்டே செயற்படுகின்றோம். மாணவர்க்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, நல்லறிவுரை என்பவற்றை கூறி நாம் புறந்தள்ளி நில்லாது நாமும் அதன் வழி பயணிக்கின்றோம்.

நவீன உலகம் எங்கோ உயர்ந்து வளர்ந்திருக்க பண்டைய முறைமைக்கல்வியிலும் பண்டைய அடக்குமுறைக் கற்பித்தல் வழிகாட்டலிலும் நின்று புகழ்பாடுவது விருப்புடையதல்ல. நவீன உலகியல் சிந்தனைக்கு ஏற்ப எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொண்டு கற்பித்தலுக்கான நவீன சாலச் சிறந்த வழிகளைத் தேர்ந்து அதன்வழி நடப்பதே யதார்த்தமானது எனப்புரிந்தே எமது நிறுவனம் இயங்குகின்றது. நாம் இந்நிறுவனத்தின் பெயரை மாற்றுவதன் நோக்கம் எமக் கொரு தனித்தன்மை ஏற்படுத்தற் பொருட்டும் அதிஷ்டதிருநாமமாக மாற்றுதற் பொருட் டும் மாணவர் உலகை மகிழ்வித்தற் பொருட்டுமே.

எமது நிர்வாகத் திறனின் உன்னத வளர்ச்சியின் உயர்ச்சியாய் தோன்றியதே எமது பருத் தித்துறை வீதி, கட்டப்பிராயிலுள்ள மதுரம் உயர்கல்விப்பிரிவு. இதற்கும் மாணவர்களின் மகத்தான வர வேற்புக் கிட்டியுள்ளது. எனவே எமது சேவை தொடர்வதற்கும் எம் சக்திக்கும் அப்பால் இம்மலரை வெளியிடுவதற்கும் ஆசிகள் வழங்கிய பெரியோர்க்கும் அனுசரணை வழங்குகின்ற எமது பெற்றோராகிய வர்த்தக பிரமுகர்களுக்கும் விழாச் சிறக்க உதவுகின்ற அனைவருக்கும் நிறுவனம் வளர உதவுகின்ற பிரதேச என்நேச மக்களுக்கும் என்ஞான்றும் என் இனிய நன்றியுடன் மதுரமாய் மலர்ந்துள்ள என் புதிய நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சிறப்பு மலர்

கடந்த பல வருடங்களாக டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, இருபாலையில் இயங்கிவரும் மது கல்வி நிறுவனம் இன்று முதல் 'மதுரம் இன்ஸ்ரிரியூட்' என்னும் அழகிய அதிஷ்ட திருப்பெயருடன் தனது சேவையைத் தொடர்வதையிட்டு இம்மலர் வெளிவருகின்றது.

## அழைப்பிதழ்

**நிறுவன திருப்பெயர் மாற்று விழாவும் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பும்**

இடம்: மதுரம் இன்ஸ்ரிரியூட் பிரதான மண்டபம்

காலம்: இன்று (19.05.2008) திங்கள் காலை 9 மணி

தலைவர்: திரு.எஸ்.கே.கிருபாகரன் B.A. *(நிறுவன நிர்வாகி)*

பிரதம விருந்தினர்: திரு.எஸ்.கே.யோகநாதன்
*(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)*

எமது நிறுவன பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்விசார் அறிஞர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.


## விழா விளம்பர அனுசரணை வழங்கும் பெற்றோர்களான வர்த்தக பிரமுகர்கள்

**கிருபா கிறேசர்**
கட்டடப் பொருள் ஒப்பந்தகாரர்
வல்லைச் சந்தி, - ருத்தித்துறை வீதி.

**ஈஸ்வரன் கிறேசர் அன் ரான்ஸ்போட்**
கட்டடப் பொருள் ஒப்பந்தகாரர்
புத்தூர்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
**சிறி சிவாஞ்சனா நகையகம்**
இல.149ஏ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான வாகனங்களையும் சிறந்த முறையில் சுத்திகரிக்கும் இடம்
**கிருஷ்ணா சேவிஸ் ரேசன்**
பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச் சந்தி.

சுவையின் சிகரம்
**இரட்டைச் சங்கு மார்க் பப்படம்**
கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராய்.

சகலவிதமான வாகனங்களையும் சிறந்த முறையில் சுத்திகரிக்கும் இடம்
**யூனியன் சேவிஸ் ஸ்ரேசன்**
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

சகலவிதமான வாகனங்களையும் சிறந்த முறையில் சுத்திகரிக்கும் இடம்
**[illegible] வாகன சுத்திகரிப்பு நிலையம்**
பருத்தித்துறை வீதி (கோப்பாய் கிராம சபை முன்பாக), கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**அம்பாள் அரைக்கும் ஆலை**
இருபாலைச் சந்தி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**காந்தி வர்த்தக நிலையம்**
கலைமணி வீதி,
கட்டைப்பிராய்.

**மாமா வர்த்தக நிலையம்**
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

**யசோ பந்தல் சேவை**
ஞானபாஸ்கரோதய சங்க வீதி,
கல்வியங்காடு.

**ராசல[illegible] களஞ்சி[illegible]**
டச்சு வீதி, இரு[illegible]
கோப்பாய்[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரம் இன்ஸ்ரிரியூட்

டச்சு வீதி இருபாலை கோப்பாய்




**இந்நாளில் சிறப்புச் சித்தி பெற்று பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும் எமது நிறுவன O/L 2007 மாணவர்களான இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**


சி.தாருகாஸ் 10A


ப.துர்க்காயினி 9AB


சி.ஶ்ரீதேவி 8A2B


ர.துஸ்யந்தி 8ABC


வி.சனுஜா 8ABC


செ.கோபாலகிருஸ்ணன் 7A3B


ப.துளசிமாறன் 7A2BC


வ.வோசிகா 6A2B2C


து.மயூரி 6AB3C


க.சயந்தன் 5A4BC


இ.கிருத்திகா 5A3B2C


கோ.பிரதீப் 5AB3CS


இ.சங்கரன் 5A3CS


ப.கிருபா 4A4B2C


நீ.மயூரன் 4A3B2CS


பா.சரிதா 4A3B3C


இ.தனுசா 4A3B2CS


சு.லக்சி 4A3B2CS


வி.அஜிதா 4AB5C


இ.சவிந் 3A4B2CS


சே.கார்த்திகா 3A3B3CS


க.கர்சினி 3A3B2C2S


ச.விஜிதா 3A2B3C2S

**இவர்களுடன் சித்தி பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.**

மதுரம் இன்ஸ்ரிரியூட்,
டச்சு வீதி, இருபாலை,
கோப்பாய்.

நிறுவன கல்விச் சமூகமும்
மாணவர் நலன் விரும்பும்
பெற்றோரும்.


**விஜயன் பதிப்பகம்**
சந்தை வீதி, நல்லூர்,
கல்வியங்காடு.

**கணேஸ் ரான்ஸ்போட்**
இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**கண்ணா ரவல்ஸ்**
இருபாலை வீதி,
கோண்டாவில்.

**ராசன் களஞ்சியம்**
டச்சு வீதி, இருபாலை,
கோப்பாய்.

**ஐயர் அரிவு காலை**
புலவனார் வீதி, கல்வியங்காடு.

**ஜெகன் போட்டோ**
இல.159, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.


## ஆசிச்செய்தி



மது கல்வி நிறுவனம் என்னும் பெயரில் இயங்கி கடந்த பல ஆண்டுகளாக அநாதை மாணவர்கள், வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அரும்பணி ஆற்றிவரும் இந்நிறுவனம் ''மதுரம் இன்ஸ்ரிரியூட்'' என்னும் பெயரில் மாற்றப்படும் இவ்வேளையில் ஆசிச்செய்தி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒரு பெரும் சொத்து. கல்வியை இழத்தல் வாழ்க்கையையே இழந்ததற்கு ஒப்பாகும். இவ்விதமான உயரிய கல்வித் தொண்டை மக்களுக்கு ஆற்றிவரும் மதுரம் கல்வி நிறுவனத்தையும் நிறுவனத்தின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் அனைவரையும் மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

*அருட் பணி சி.ஜீ.ஜெயக்குமார், இயக்குநர், கரித்தாஸ் - நியூடெக், யாழ்ப்பாணம்.*

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



எனது வலி-கிழக்கு பிரதேசத்தில் இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்களுள் இதுவரை காலமும் மது கல்வி நிறுவனம் என்று அழைக்கப்பட்ட மேற்படி நிறுவனமானது மதுரம் கல்வி நிறுவனம் என்ற பெயர் மாற்றத்தோடு தனது கல்விச் சேவையை மிகச்சிறப்புடன் வழங்குவது பாராட்டிற்குரியது.

மேற்படி நிறுவனமானது அளுமைமிக்க ஆசிரியர்களின் சேவையிலும் பாடசாலையை ஒத்த ஒழுக்கச் செயற்பாடுகளையும் கொண்டுள்ளது என்பதனை அறிகிறேன். இக்கல்வி நிறுவனத்தின் வெளிப்பாடுகள் குறிப்பாக 5ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் க.பொ.த. ச/த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களது பெறுபேறுகளில் இருந்து நல்லதோர் அடைவு மட்டத்தை அண்மித்துள்ளமையை அறிய முடிகிறது இதன் மூலம் கல்விச்சேவையில் இந்நிறுவன்மானது மேம்பாடு அடைந்துள்ளது என்பது கண்கூடு.

சேவை நோக்கோடு, வறிய மாணவர்களுக்கும், ஆதரவற்ற மாணவர்களுக்கும் இலவசக் கல்வி மற்றும் கட்டணச் சலுகை வழங்கி கல்வி கற்பிப்பது பாராட்டிற்குரியது. கல்வி மட்டுமன்றி, கலை பண்பாட்டிலும் மேலோங்கி நிற்கிறது இந்நிறுவனம். நிறுவனத்தின் நிர்வாகியையும், ஆசிரியர் குழாத்தினையும் வாழ்த்துவதோடு இவர்களின் பணி மென்மேலும் தொடர எனது ஆசிகள்.

*சி.ஏ.மோகன்றாஸ், கோப்பாய் பிரதேச செயலர்.*

## மது மதுரமாகிச் சிறப்புடன் தழைக்க...



மக்களின் கல்விக்குச் சிறப்பாக அமைவன கல்வி நிறுவனங்களாகும். பாடசாலை, பல்கலைக்கழகம் என்பன ஒன்றன்மேல் ஒன்றான இரு தொடர் நிலைகளாக அமைந்துள்ளன.

'மது', 'மதுரம்' என்ற இரு சொற்களும் 'அதிமதுரம்' என்ற சமமான பொருளுடைய சொற்களாகும். இக்கல்வி நிலையத்தில் முதலாம் தரம் முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புகள் உள்ளன. இங்கு ஆண்டுதோறும் நானூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுச் சிறப்பு நிலைகளைப் பெற்று வருகின்றனர். இதற்கு இங்குள்ள ஆசிரியர்களின் கற்பித்தற் சிறப்பும் காரணமாகும்.

இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துரையாடலும் காரணமாகும். ''மது கல்வி நிறுவன''த்தின் சிறப்புகளுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' எனத் திருவள்ளுவர் அவர்கள் இத்திருக்குறளில் கூறியது போல மாணவர் அனைவரும் சிறப்படைக என வாழ்த்துகின்றேன்.

*கருமத்திரிதி லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா.*

## அறிவுப் பசியை போக்கும் நிறுவனம்



தென்கோவையில் மாணவர்களின் அறிவுப் பசியை போக்குகின்ற சிறந்த நிறுவனம் இது. இதன் வளர்ச்சி பற்றி நான் நன்கு அறிவேன். நான் ஓர் ஆசிரியராக இருந்தகாலத்தில் இந்நிறுவனத்தில் கல்வி கற்பித்தேன். இதனைக் கடந்த 6 ஆண்டு காலமாக சிறப்பாக நடத்திவரும் கிருபாகரன் சிறந்த ஒரு நிர்வாகி மட்டுமல்ல நல்ல தமிழ் அறிஞனும் பேச்சாளரும் கூட. அவர் மாணவர்களை நல்வழிப்படுத்தி சிறந்த கட்டமைப்புடன் இந்நிறுவனத்தை நடத்தி வருகின்றார். இந்நிறுவனத்திலேயே என் மகளையும் கல்வி பயில்வதற்கு இணைத்துள்ளேன். காரணம் தரமான ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செய்ற்பாடுகளை மேற்கொள்கின்றது என்பதனாலேயே. நிறுவனம் மேலும் சிறக்க என்னுடைய அறிவு வழிகாட்டலும் ஆசிகளும் என்றும் இருக்கும்.

*வி.எம்.முத்துராஜா, முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்,*
*வலிகாமம் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் - கல்வி சிறுவர் பாதுகாப்பு - இலங்கை*

## மதுரம் என்றால் அமிர்தம்



மனித விழுமியங்களை மலரச் செய்வது கல்வி. சுவாமி விவேகானந்தர் கல்விக்கு வரைவிலக்கணம் கூறும்போது மனிதனுள் ஆழ்ந்து கிடக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி என்று குறிப்பிடுகின்றார். மனிதனுள் மறைக்கப்பட்ட நிலையில் பயனற்றுக் கிடக்கின்ற கல்வி அறிவை வெளிப்படுத்தி மாணவர்களின் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஒழுக்கமாகப் பிரதிபலிக்கச் செய்வது ஆசிரியர்களின் கடமையாகும்.

கல்வியில்லாதவனை 'இரு கால் விலங்கு' என்றும் 'கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்' என்றும் 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்றும் 'க்ல்வி அழகே அழகு' என்றும் எமது ஆன்றோரர்கள் கல்வியின் மதிப்பிடற்கரிய பெறுமதியை உணர்ந்து கூறியுள்ளனர். மனிதன் மனிதனாக, தன்மானமுள்ளவனாக வாழ்வதற்குக் கல்வியே முக்கிய காரணியாக அமைகின்றது. இந்த உண்மையை நன்குணர்ந்து செயற்பட்டவர் மதுரம் கல்வி நிறுவனத்தின் அதிபர் திரு.க.கிருபாகரன் அவர்கள்.

மதுரம் என்றால் அமிர்தம் அல்லது மிக்க இனிமை என்று பொருள்படும். இத்தகைய பெயர் இந்நிறுவனத்துக்கு அமைவது சாலப் பொருத்தமுடையதே. இந்நிறுவனம் மாணவர் களது கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கநெறியிலும் மிகக் கவனஞ் செலுத்தி வருவது போற்றுதற்குரியதொன்றாகும். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிபரும் மிகக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் மாணவர்களை வழி நடத்தி சமுதாயத்தில் ஒழுக்கமும் ஆற்றலும் மிக்க பிரஜைகளாக உருவாக்கி வருவதையிட்டு நாமெல்லோரும் பெருமையடைகின்றோம்.

'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க யாவரும் கல்வியால் இன்புறவேண்டும் என்ற நல்லெண்ணம் இந்நிறுவன அதிபர் ஆசிரியர்களுக்கு இருப்பதால் அவர்களை எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமான் ஆசீர்வதித்து அருள்பாலிப்பாராக.

இன்று பாராட்டிக் கௌரவிக்கப்படும் க.பொ.த. சாதரண தர மாணவர்களையும் மன மார வாழ்த்துவதோடு, அவர்கள் பல பரீட்சையிலும் சிறப்புச் சித்தியெய்தி சமூகத்தில் பக்தியுணர்வோடு நல்லவர்களாக, வல்லவர்களாகத் திகழவேண்டுமென எம்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பண்டிதர், சைவப்புலவர் த.இராசரத்தினம், *ஓய்வுபெற்ற ஆசிரியர்,*
*திருப்பணிச் சபைத் தலைவர், இருபாலை கற்பக விநாயகர் தேவஸ்தானம்.*

## ஆசிச்செய்தி



கல்வியங்காட்டில் இதுவரை காலமும் மது கல்வி நிறுவனம் என்று செயற்பட்டு வந்த கல்விச்சாலை தனது பெயரை மதுரம் இன்ஸ்ரிரியூட் என மாற்றம் செய்து தனது கல்விச்சேவையை தொடரப் போகிறது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற முதுமொழி போன்று எமது ஊரில் நிலைத்து நீடித்து நிற்கின்ற இந்நிறுவனமானது கல்வியங்காட்டு மாணவர்களை மட்டும் கொண்டிராது கோண்டாவில், கட்டப்பிராய், முடமாவடி, கோப்பாய் ஆகிய பகுதிகளில் இருந்து வருபவர்களையும் அரவணைத்து ஆதரவு கிடைக்காத மாணவர்களுக்கு கட்டணமின்றியும் அரைச் சலுகையுடனும் அவர்களுக்கு முன்னேற்ற படிகளாகவும் நிர்வாகத்தால் அரச பாடசாலைகளுக்கு ஒப்பீடாக சகல துறைகளிலும் செயற்படுவது பாராட்டுக்குரியது.

மேற்படி நிறுவனத்தில் கற்று நல்ல பெறுபேறுகளை பெறும் மாணவர்களை வைத்து பார்க்கும் அளவுகோல் நிறுவனத்தின் தரத்தின் தன்மையை உணர்த்தும் எனக் கருதுகிறேன். இதற்காக அயராது உழைக்கும் நிறவன உரிமையாளரையும் அவர் தம் ஆசிரிய குழாத்தையும் பாராட்டுவதோடு மென்மேலும் நிறுவனம் வளரவும் தன் பணி சிறக்க இறையருள் சேர்க என வேண்டி ஆசிகள் கூறுகின்றேன்.

லயன் ஜீ.ரி.ஞானசேகரவேல் ப.நீ.,
*கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி.கிழக்கு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித நேயம் மிக்க மக்கள் பணியாளர்

அருட்பணி M.X. கருணாரட்ணம் அவர்கள் 57 வருடங்களும் ஒரு வாரமும் வாழ்ந்த நிலையில் வலிந்து இவ்வுலகிலிருந்து அகற்றப்பட்டுள்ளார். அவருடைய அர்த்தம் பொதிந்த ஆழமான இருப்பினால் அச்சுறுத்தலுக்குள்ளானவர்கள் அவரை எம்மிடமிருந்து திட்டமிட்டு அகற்றி இருக்கின்றார்கள். அவரை கொலை செய்தவர்கள் அல்லது கொலை செய்யத் தீர்மானித்தவர்கள் அவரைப்பற்றி உண்மையாக அறியவும் அவரோடு பழகவும் சந்தர்ப்பம் கிட்டியிருக்குமானால் நிச்சயம் அவர்களும் அவருடைய ஆளுமையினால் ஆகர்சிக்கப்பட்டிருப்பார்கள்.

## வேரடிவாழ்வு

அடிகளார் 1951ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி நெல்லியடி, கரவெட்டியில் காலம் சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியாம்பிள்ளை, இரத்தினம் இராசமணி தம்பதியினருக்கு நானகாவது பிள்ளையாகப் பிறந்தார். நான்கு பெண் பிள்ளைகளையும் ஆறு ஆண் பிள்ளைகளையும் கொண்ட ஒரு பெரிய குடும்பத்திலே வளர்ந்தார். இவருடைய தாய் ஓர் ஆசிரியர். தந்தை அரச பணியாளர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், திரு இருதயக் கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். அறிவுத்திறன் கொண்ட மாணவனாக விளங்கிய இவர் எப்பொழுதும் தமக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும், பிறரன்புப் பணி புரிவதிலும், விடயம் அறிந்தவர்களோடு நீண்ட நேரம் உரையாடுவதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார் என்று இவரை அறிந்தவர்கள் கூறுவர். தனது உயர்கல்வியை முடித்த நிலையில் இலங்கை வங்கியில் பணியாளராக இணைந்த போதிலும் "கிளிமாஸ்ரர்" என்று பரவலாக அறியப்படும் அளவிற்கு இவர் கற்றுக் கொடுப்பதிலே ஆர்வம் கொண்டு இருந்தார். தனியார் கல்வி நிலையம் ஒன்றில் ஆங்கிலம் கற்பித்து பலருக்குப் பயனுள்ள பணியாற்றினார். இப்படித்தான் இவர் "கிளிமாஸ்ரர்" ஆனார். இவர் தன்னுடைய இளமைப் பருவத்திலே சமூகம், திருச்சபை என்னும் இரண்டு தளங்களிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார்.

அவருடைய சமூக ஈடுபாடு அரசியல் ஈடுபாடாக பரிணமித்த போது அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து ஊக்கத் தோடு செயலாற்றி வந்தார். உடுப்பிட்டி தேர்தல் தொகுதியின் கூட்டணி வேட்பாளரின் சார்பில் மிகக் கடுமையாக பிரச்சாரம் செய்து தமிழர் சார்பில் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து ஒருவரை முதன் முதலாக நாடாளுமன்றம் அனுப்புவதற்கு தன்னுடைய பங்களிப்பை நல்கியிருந்தார். இவரது அதிதீவிரமாக பங்களிப்புச் செய்யும் இயல்பு காரணமாக கட்சியின் சகல மட்டங்களிலும் குறுகிய காலத்திலேயே செல்வாக்கு உள்ளவரானார். ஆனால் இவருக்கான இறைத்திட்டமோ வேறுவிதமாக இருந்தது.

## பணிக்குருத்துவப் பயணம்

கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூயில் மறை மாவட்டக் குருவாக உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்த தனது தம்பி ஞானரெட்ணம் அவர்களைச் சந்திக்கச் சென்றுவரும் காலங்களில்தான் இவருக்கும் குருத்துவக் கல்லூரியின் அப்போதைய அதிபர் அருட்பணி பிலிப் பொன்னையாவுக்கும் இடையில் உறவு மலர்ந்தது. அவரின் வழிகாட்டலில் இவர் தனது அழைத்தலை உய்த்துணர்ந்த நிலையில் வங்கித் தொழிலையும் உலகப் புகழையும் துச்சமென மதித்து பணிவாழ்விற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். உலகில் அடிபட்டு எந்த சவாலையும் சந்திக்கும் நிலைக்கு உருவாக்கப்பட்டிருந்த இவரது ஆளுமை குருத்துவ உருவாக்கல் காலத்தில் இன்னும் அதிகமாகப் புடம் போடப்பட்டது. அப்போதைய ஆயர் வணகத்துக்குரிய தியோகுப்பிள்ளை இவர் மட்டில் விசேட நம்பிக்கை கொண்டிருந்தார். இவரும் அவர் மட்டில் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தார். ஆயரின் பக்கத்துணை இவர் சந்தித்த சவால்களை எதிர்கொள்ள இவருக்குத் துணை புரிந்தது. 25.09.1989இல் இவர் யாழ். மறை மாவட்டத்திலே அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். திருத்தொண்டராக இளவாலைப் பங்கிலே பணியாற்றிய இவர், உதவிப் பங்குத் தந்தையாகப் பாசையூர் பங்கிலும் பின்பு பங்குத்தந்தையாக முறையே வலைப்பாடு, தாழையடி, மானிப்பாய், மாங்குளம், அச்சுவேலி, நாவாந்துறை, புலோப்பளை, வவுனிக்குளம் ஆகிய பங்குகளிலும் பணியாற்றினார். இப்பணிகளோடு சிலகாலம் யாழ்.மறை மாவட்ட கல்வி ஆணைக்குழு இயக்குநராகவும், கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவராகவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராகவும், வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளராகவும் செயலாற்றினார். மரணத்தை எதிர்கொண்டபோது இவர் வவுனிக்குளப் பங்குத் தந்தையாகவும் மனித உரிமை செயலப் பணிப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

## பலியான குரு

பல்வேறு தளங்களில் பல்வேறு பரிமாணங்களுடன் இவர் பணியாற்றி வந்தாலும் முந்தமுந்த தன்னை ஒரு கத்தோலிக்கத் திருச்சபையின் பணிக் குருவாகவே அடையாளப்படுத்தி வந்தார். தன்னுடைய தலைவனாக இவர் வரிந்து கொண்டிருந்த இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து துன்புறும் மக்களதும் ஒடுக்கப்பட்ட மக்களதும் குரலாக ஓங்கி ஒலித்து அதற்குரிய பரிசான இரத்த மரணத்தையும் இவர் பெற்றுக் கொண்டார். மனித நேயத்தை, மானுட சகோதரத்துவத்தை, இறையாட்சியின் மலர்ச்சியை வென்றெடுக்கும் தீமைக்கெதிரான போராட்டத்திலே இயேசு எவ்வாறு இரத்தம் சிந்தி தன்னை கையளித்தாரோ அது போலவே இவரும் தனது வாழ்வையும் வாழ்வின் முடிவையும் வடிவமைத்திருந்தார். இவரது அரசியல் பணியோ, கல்விப் பணியோ, சமூகப்பணியோ ஏன், குருத்துவப் பணியோ கூட இறையாட்சியின் விடிவிற்காக உழைக்கும் இயேசுவின் சீடன் தான் என்கின்ற தளத்திலிருந்துதான் மேல் கிளம்பியது.

## பங்குப் பணியாளராக

இவர் தான் பணியாளராகப் பொறுப்பேற்ற பங்குகளில் எல்லாம் அடித்தள மாற்றத்திற்காக கடுமையாக உழைத்தார். தேவையற்ற பாரம்பரியங்களை நீக்குவதிலும் நன்மையானவற்றை, புதியவற்றை உருவாக்குவதிலும் விடா முயற்சியுடனும் திடசித்தத்துடனும் ஈடுபட்டார். இத்தகைய அவருடைய செயற்பாடுகள் எதிர்ப்புக்களை உருவாக்கிய போதும் முன் வைத்த காலை இவர் எப்போதும் பின்வைத்தவர் அல்ல. இவர் சில பங்குகளை நிராகரித்தார்; சில பங்குகள் இவரை நிராகரித்தன. இன்னும சில பங்குகள் இவரால் அடித்தளமான மாற்றங்களை ஏற்றுக் கொண்டு புதிதாய் மலர்ந்தன. இத்தகைய பங்குகளுள் வலைப்பாடு, நாவாந்துறைப் பங்குகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இரணைதீவிலே நிலவிய சமூகப் பொருளாதார அடிமைக்கட்டுமானத்தை தனது இலௌகீக, ஆத்மீக பலங்கள் அத்தனையையும் பயன்படுத்தி உடைத்தெறிந்தார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையையும் கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியையும் வழங்க வந்த இயேசுவின் சீடன் எதைச் செய்ய வேண்டுமோ அதை வந்த எதிர்ப்புக்கள் அத்தனையையும் எதிர் கொண்டு நிகழ்த்திக் காட்டினார். நாவாந்துறையில் அவருடைய பணி வித்தியாசமானதாக இருந்தது. சமூகங்களுக்கிடையே காணப்பட்ட காலாதிகால பகைமையை இறைநம்பிக்கையின் அடிப்படையிலேயே அகற்றி ஆணென்றுமில்லை, பெண்ணென்றும் இல்லை. அடிமை என்றும் இல்லை, உரிமைக் குடிமகன் என்றுமில்லை. உரோமையர் என்றுமில்லை. கிரேக்கர் என்றும் இல்லை. கிறிஸ்துவுக்குள் அனைவரும் சகோதரரே என்கின்ற கிறிஸ்தவக் கோட்பாட்டை நிலை நிறுத்தினார். பாரம்பரியமாக விசுவாசத்தில் ஊன்றியிருந்த இம் மக்களின் விசுவாச வேர்களை அடையாளம் கண்டு அவற்றைத் துளிர்க்கச் செய்தார். இதனால் இன்று நாம் இறைமக்கள் என்ற உணர்வோடு நாவாந்துறைப் பங்குக் குழுமம் எழுச்சி கண்டு வருகின்றது. அன்போடு பேசுவது, கோபத்தோடு கண்டிப்பது, மன்னித்து கட்டி அரவணைப்பது என்று பல உத்திகளினால் அவர் மக்களின் மனங்களில் நிறைந்தார். அவர் பணியாற்றிய பங்குகள் ஒவ்வொன்றிலும் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் இவர் தம்மோடு நெருக்கமாக இருக்கின்றார் என்பதை உணர்ந்து கொண்டார்கள் ஒடுக்குபவர்களோ இவரது அறச்சினம் தமக்கெதிராகப் பொங்கி யெழும் என்பதை அறிந்திருந்தார்கள்.

## சமூகப் பணியாளனாக

தனது குருத்துவத்திற்கு முன்னான வாழ்விலும், குருத்துவப் பங்குப் பணிக் காலங்களிலும் இவர் சமூகப் பணியாற்றியே வாழ்ந்தாலும் கூட அது உச்சநிலை அடைந்தது 1995ம் ஆண்டின் மாபெரும் வலிகாம இடம்பெயர்வின் பின்னேயே ஆகும். மானிப்பாயில் பணியாற்றிய இவர் இடப்பெயர்வின்போது மாங்குளம் சென்றடைந்தார். வன்னியின் வளம் கொழிக்கும் மண்ணைக் கண்ட போது இவருக்குள்ளே இயல்பாக உறங்கிக் கொண்டிருந்த கரவெட்டித் தோட்டக்காரன் விழித்துக் கொண்டான். கோயில் வளவில் மரக்கறித் தோட்டம் ஆரம்பித்த இவர் இடம்பெயர்ந்து அல்லலுற்ற மக்களுக்கு இறை பராமரிப்பை நம்பி உணவளிக்கத் தீர்மானித்தார். அந்த நாள்களில் அவரது பங்கில் தினமும் அன்னதானம் நடைபெற [illegible] ஒவ்வொரு [illegible] வண்ணம் தினமும் வருவோருக்கு எல்லாம் உண வளிக்கத் தொடங்கினார். இவருடைய இந்த சமூகப் பணியின் ஒரு வளர்ச்சிக் கட்டமாக கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராக நியமனம் பெற்றார். இந்தப் பதவியை மிகவும் கண்ணும் கருத்துமாக நிறை வேற்றி மாபெரும் மனித அவலம் நிறைந் திருந்த அந்த நாள்களிலேயே அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியையும் ஒருங்கிணைத்து மக்களின் நலன் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு காய்த்தல், உவத்தலின்றிப் பணியாற்றினார். இவருடைய இந்த இடையறாத பணியினால் மூடுண்ட வன்னிக் காட்டிலே மக்கள் அனுபவித்த நிர்க்கதி நிலை உலகின் மனச் சாட்சியின் முன்னால் திறந்து வைக்கப்பட்டது.

## ஊடகவியலாளனாக...

இவர் நல்லதொரு பத்திரிகையாளராக இருந்தார். இவ்வாறு நல்லதொரு பத்திரிகையாளனாக இவர் திகழ்ந்ததற்கான ஒரேஒரு தகுதி இவர் நல்லதொரு வாசகர் என்பது மட்டுமே. 1995 இடம் பெயர்வுக்கு முன்னான காலங்களில் யாழ். மறைமாவட்ட நீதிக்கும், சமாதானத்துக்கமான ஆணையத்தின் வெளியீட்டுப் பகுதிக்கு கூட்டுப் பொறுப்பேற்று "தரிசன பூமி" என்ற சிறு சஞ்சிகையை நடாத்தினார். இது இரண்டு இதழ்களே வெளிவந்த நிலையில் இடப்பெயர்வு காரணமாக நின்றுபோனது. இரண்டு இதழகளாயினும் அவை இரண்டும் அப்போதைய மனித உரிமை நிலவரத்தில் சலசலப்புக்களை ஏற்படுத்தின. இடப்பெயர்வின் பின் வன்னி மண்ணிலிருந்து "விருட்சம்" என்கின்ற கிறிஸ்தவ மறை இதழை எத்தனையோ இடர்பாடுகள் மத்திலும் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார். பத்திரிகைத்தாள் கடுமையான தட்டுப்பாட்டுக்கு உள்ளானாலும் இவரது பத்திரிகை மட்டும் நிற்காது. இதே காலத்தில்தான் மணிலாவில் இருந்து முழங்கும் ரேடியோ வெரித்தாஸின் தமிழ்பணியோடு இவருக்குத் தொடர்பு ஏற்படடது. அன்று அந்த வானொலியில் நடத்திக் கொண்டிருந்த அருட்பணி ஜெகத் கஸ்பாருககும் இவருக்கும் ஏற்பட்ட கருத்தியல் ஒற்றுமையினால் ரேடியோ வெரித்தாசே ஒரு புது முகம் பெற்றது. குரலற்றிருந்த ஈழத்தமிழ் மக்களின சர்வதேசக் குரலாக வெரித்தாஸ் வானொலி ஓங்கி ஒலித்ததும் இந்த நாள்களில்தான். இவ் வானொலியூடாக நடாத்தப்பட்டவன்னி மக்களின் பட்டினிக்கு எதிரான இயக்கம் புலம்பெயர் தமிழ் மக்களின் பார்வையை இங்கு குவிமையப் படுத்தியது இதில் அருட்பணி கருணாரெட்ணத்தினுடைய பங்கும் பணியும் மகத்தானது.



"கிறிஸ்துவுக்குப் புகழ்"

## மனிதஉரிமை செயற்பாட்டாளராக...

நோர்வேயின் மத்தியஸ்தத்தோடு ஆரம்பமான சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தின் ஓர் அம்சமாக வடக்குகிழக்கு மனித உரிமைகள் செயலகம் நிறுவப்பட்டது. இதன் ஆரம்பத்திலிருந்து இவரது இறப்புவரை அதன் பணிப்பாளராக இவர் கடமையாற்றினார். இவரது பகிரங்கப் பணிவாழ்வின் உச்ச வீச்சாக இந்நாட்கள் அமைந்திருந்தன. ஒரு சர்வதேச மதிப் பார்ந்த நிறுவனத்தின் பணிப்பாளர் என்பதால் [illegible] அனைத்து செல்வாக்கையும் இவர் தமிழ மக்களின் விடிவை நோக்கி பயன் [illegible] பயன்றார். இச்செயலகத்தின் குழுவை ஜெனிவாவிற்குத் தலைமை தாங்கி அழைத்துச் சென்ற அவர் அங்கு தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்தியம்பினார். வடக்குக் கிழக்கில் அரச தரப்பினரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி வந்த இவர் அவற்றை விலாவாரியாக சர்வதேசத்தின் முன் கொண்டு சென்றார். கிடப்பிலே போடப்பட்டிருந்த அல்லைப்பிட்டி படுகொலைகள் போன்றவற்றை தூசி தட்டி எடுத்து ஆவணங்களாக உருவாக்கினார். இவ்வாறு முழுவீச்சிலான ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளராக இவர் பரிணாமம் கொண்டதுதான் உண்மையில் இவரது மரணத்துக்கான காரணமாகவும் மாறியிருந்தது. இவரது தர்க்க சிந்தனையும், பேச்சுத்திறனும், உரையாடும் மறுதரப்பாரின் மனமறிந்து கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றலும் இவரது வாதங்களை வெற்றிகரமாக சர்வதேச ரீதியிலே முன்னெடுத்துச் சென்றபோது, கூடவே இவர் மௌனியாக்கப்படும் ஆபத்தும் வளர்ந்து வந்தது. மாற்றுக் கருத்துக்களை ஆயுத முனையினால் எதிர்கொள்வது என்பது எமது மரபுக்கு புதுதானதல்லவே. அந்த மரபுக்கிணங்க அடிகளாருக்கும் 20.04.2008 மதியம் 12.30 மணியளவில் மாங்குளம் வவுனிக்குளம் வீதியில் அம்பாள் புரத்திற்கு அருகில் மறைக்கப்பட்டிருந்த கிளைமோர் ஒன்றினால் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

## சிங்கள மக்களுடனான உறவுப் பாலம்:

உண்மையில் பலருக்குத் தெரியாத அடிகளாரின் ஒரு பரிமாணம் இதுவாகும். வடக்கில் உள்ள பல குருக்களுக்கும், பொது மனிதரகளுக்கும் இல்லாத அளவுக்கு தெற்கில் சிங்கள மக்கள் பலருடன் தொடர்புகள் வைத்திருந் தவர் இவராவர். சந்தர்ப்பம் கிடைக் கும் போதெல்லாம் தெற்கு சென்று பல அடிமட்ட குழுக்களையும், குருக் களையும் சந்திப்பார். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து விளக்குவார். அவர்களை வடக் கிற்கு அழைத்து வருவார். இவ்வாறு பல சிங்களக் குழுக்கள் இவரிடம் வந்து இவரது விருந்தோம்பலை அனுபவித்துச் சென்றிருக்கின்றனர். ஒருமுறை ஏழு பஸ்களில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் அருட்தந்தை கொல்லப்பட்ட அதே தெருவால் வந்து அவரது கலைவரிப் பூங்காவிலே தங்கிச் சென் றுள்ளார்கள். வவுனிக்குளம் முழுவதும் திரண்டு இவர்களை வரவேற்றது. இவரது மரணம் பற்றி ஒரு சிங்களக் குருவானவர் எழுதுகையில் "இலங்கையில் சிங்கள மக்களும் தமிழ்மக்களும் இணைந்து ஒரு தீர்வை பேச்சு வார்த்தையின் மூலம் உருவாக்க முடியும் என்று நம்பி அதற்காக உழைத்து வந்த ஒருவர் இன்று கொல்லப்பட்டுவிட்டார்" என்று குறிப்பிடுகின்றார். உண்மையில் மனித உரிமைகள் செயலக பணிப்பாளராக இவர் எந்த ஒரு வெளிநாட்டு முக்கியஸ்தர்களையும் சந்திக்கும் போதெல்லாம் இவர் வேண்டுவது ஒன்றுதான். "இருதரப்பின் மீதும் செல் வாக்கு செலுத்தி வரக்கூடிய போர் ஒன்றை தயவுசெய்து நிறுத்துங்கள். ஏனெனில் அத்தகையதோர் போர் கேட்கக் கூடிய விலை மிகமிக அதிகம்" இவ்வாறுதான் அவர் திரும் பத்திரும்ப வேண்டுகோள் விடுப்பார்.

தமிழ் மக்களை அன்பு செய்தது போலவே சிங்கள மக்களையும் அன்பு செய்து அவர்களுடைய உரிமைகளுக்காகவும் குரல்கொடுத்த ஒருவர்தான் இன்று கொல்லப்பட்டுள்ளார் நீர்கொழும்பு மீனவரின் உரிமைக்காகவும், நுரைச்சோலை மக்களின் நன்மைக்காகவும், அனுராதபுர விவசாயிகளின் மேம்பாட்டுக்காகவும் சுதந்திர வர்த்தக வலய பெண்களின் நலனுக்காகவும் உழைத்த சிங்கள முற்போக்கு சக்திகளோடு இவர் கரமிணைத்திருந்தார்.

இவ்வாறாக அவர் ஒரு தேசியவாதியாக அல்ல, ஆனால் ஒரு சர்வதேசியாக ஒடுக்கப்படும் மக்களின் துன்பங்களை எல்லாம் தன் துன்பங்கள் எனக்கண்டு அவர்களுடைய உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் மனித நேயம் மிக்கவராக வாழ்ந்திருந்தார்.

எஞ்சியிருக்கும் கவலையெல்லாம் இவரதும், இவரைப்போல மனிதநேயம் மிக்கவர்களதும் மரணம், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வின் மரணமாகிவிடக்கூடாது என்பதுதான்.



31ஆம் நாள் நினைவில் குரு நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## 'வெசாக்' தின சிந்தனை

இன்று வைகாசி விசாகம். வெசாக் பண்டிகையை அனுஷ்டிக்கும் தினம்.

இலங்கைத்தீவின் இரு பெரும் மதங்களான பௌத்தத்துக்கும், இந்து சமயத்துக்கும் போற்றுதற்குரிய மிக உயரிய திருநாள் இது.

பௌத்த சீலத்தை உலகுக்குப் போதித்த கௌதம புத்தர் அவதரித்ததும், அரச மரத்தடியில் ஞானோதயம் பெற்றதும், அன்பு மார்க்கத்தைப் போதித்து பரிநிர்வாணம் அடைந்ததும் இந்த வைகாசிப் பௌர்ணமி நாளில்தான்.

சித்தார்த்த கௌதமரின் சிந்தனையில் இத்தினத்தில் சிறு ஒளிப்பொறியாக்கப்பட்டுத் தெறித்துத் தெளிந்த ஞானோதயம் உலகெங்கையும் ஆட்கொண்டது.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இந்த அறிவியல் அதிர்வு இன்று வரை உலகை வளப்படுத்தி, வழிப்படுத்தி, வலுப்படுத்தும் ஓர் உயரிய மார்க்கமாகப் பிரவகித்துக் கொண்டிருக்கின்றது.

நேபாளத்தின் எல்லைக் கிராமத்தில் அவதரித்த போதி சத்துவரின் சிந்தனை விசாலம், இயேசுவின் அவதரிப்புக்கு முந்தியது.

மனிதத்துவம் பற்றிய புத்தரின் ஆழமான - ஆளுமையான - சிந்தனைகளும் போதனைகளும் ஆசியாவின் கிழக்கேயும் மேற்கேயும் காற்றில் கற்பூரம் தீப்பற்றுவது போல இலகுவாகப் பற்றிப் பரவி இன்று சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது. கொரியா, ஜப்பான், சீனா எங்கும் அந்தப் போதனைகளும், புத்தரின் உயரிய மார்க்கமும் பரவி வியாபித்து நிற்கின்றன.

இன்று உலகில் தார்மீக சிந்தனையைப் போதிக்கும் உயரிய மதங்களுள் - மார்க்கங்களுள் - மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் அளவுக்கு அதன் கொள்கைகளும், கோட்பாடுகளும், அது வலியுறுத்தும் அறநெறித் தத்துவங்களும் அமைந்து நிற்கின்றன.

இத்தகைய மேன்மைமிக்க மார்க்கம் உலகைப் பற்றிப் பீடித்துப் பரந்து பரவியது என்றால் அதற்குக் காரணம் அதன் அர்த்தபூர்வமான வாழ்க்கைத்தத்துவமும் வழிகாட்டல்களுமேயன்றி வேறில்லை.

பௌத்த சீலமும், பௌத்த மதமும், கருணை, சமத்துவம், அன்பு, பரிவு, தார்மீகம், குரோதமின்மை, பழி வாங்காமை போன்ற சமாதான வாழ்வுக்கான மகத்துவங்களைப் போதித்தனவேயன்றி, குரோதத்தையும், விரோதத்தையும், கொலைவெறிப் போக்கையும், கொடூரத்தையும் நோக்கி மனிதத்துவத்தை வழிப்படுத் தவில்லை.

சித்தார்த்தரின் நெறி அஹிம்சையையும், அன்பையும் அரவணைத்துச் செல்வதை வலியுறுத்திய அதே சமயம், தான் உலகெங்கும் பற்றிப் பரவுவதற்கேனும் மேலாதிக்கத்தை ஒரு வழியாக நாடவில்லை.

சுருங்கச் சொல்வதானால், உயரிய அறநெறி மார்க்கம் என்று முழு உலகமுமே வியந்து போற்றி, ஏத்தி மகிழும் பௌத்த தர்மம் உலகில் பரப்பப்படுவதற்கும், நிலைநிறுத்தப்படுவதற்குமாக ஒரு வாள் கூட நிமிர்த் தப்படவில்லை. ஒரு துளி இரத்தம் கூட சிந்தப் படவேயில்லை.

அந்த தர்மத்தின் - மார்க்கத்தின் - விஞ்சிய மாண்பும், மகத்துவமும், சிறப்பும், சீர்மையும், பெருமையும், உயர்வுமே இயல்பாகவே அதன் பரவலுக்கும் தழைத்தோங்கலுக்கும் வழிசெய்தன.

ஆனால், அந்தப் பிரபஞ்ச நெறிக்கு உள்ள இத்தகைய சிறப்பு, அந்நெறி அதிகம் பரவிப் பற்றி நிற்பதாகக் கூறப்படும் இலங்கையில் மட்டும் உயர்வாக உணரப்படவேயில்லை என்பதுதான் வேதனைக்குரியது.

வாளேந்திய சிங்கக் கொடியை, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் உயராதிக்கச் சின்னமாக முன்நிறுத்தி, பௌத்த சீலத்தையும், சமயத்தையும் பரப்புவதாகக் கொள்ளும் இனவெறிக் கொடூரம் இந்தத் தீவில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

'பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படவேண்டும்' என்பதையும், 'பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்' என்பதையும் தனது அரசமைப்பின் இரண்டாவது - தனியான - அத்தியாயத்தில் உறுதிப்படுத்தியிருக்கும் இத்தேசத்தில்தான், அந்த பௌத்த சாசனத்தைப் பேணும் பெயரால் பௌத்தத்துக்கு விரோதமான கொடூர யுத்தமும், கொலைவெறியும் ஆட்சிப் பீடத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

பௌத்த மத மறுமலர்ச்சி என்ற பூடகமான - அர்த்தமற்ற - அபத்தமான - சிந்தனையில் மூழ்கிக்கிடக்கும் தென்னிலங்கை, அதை முன்னெடுப்பதற்குப் பேரின வாத மேலாதிக்கப் போக்கையும் மேலாண்மை வெறியையும் பிரயோகிப்பதே வழிஎன்றுதீர்மானித்துச்செயற்படுகின்றது.

பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் வாழ்நிலைப் பண்புகளையும் மேன்மைச் சிறப்புமிக்க விழுமியங்களையும், மாண்புமிக்க மகத்துவங்களையும் மறந்து, துறந்து, ஒதுக்கிவிட்டு-

பௌத்தத்தை நிலைநிறுத்துதல் என்ற பெயரில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதாகக் கருதிக் கொண்டு-

பௌத்த - சிங்களத் தேசியவாதத்தை பலாத்கார வழியிலும், கட்டாயப்படுத்தல் மூலமும், பௌத்தம் வெறுத்து ஒதுக்கும் ஆயுதக் கலாசார வெறிப்போக்கு வாயிலாகவும் முன்னெடுக்கமுனையும் தென்னிலங்கைச் சிங்களம் இதையே 'பௌத்த மறுமலர்ச்சியாக' அர்த்தம் பண்ணி அபத்தம் இழைக்கின்றது.

உண்மையில் காருண்யசீலர் புத்தபகவான் தமது ஞானோதயம் மூலம் கண்டு கொண்ட அறிவுடைமையை, தென்னிலங்கை ஆட்சித்தலைமை தனது நெறியாக வரித்துக்கொண்டு, புரிந்து கொண்டு, அதன் வழி செயற்பட முன்வருமானால் இலங்கைத் தீவில் புத்தர் காட்டிய வழியில் சாந்தியும், சமாதானமும், அமைதியும், கருணையும், அன்பும், அஹிம்சையும் சாத்தியமாகும்.

இந்த வெசாக் புண்ணியதினம் அத்தகைய சீரிய வாழ்வுக்கு - நேரிய - பாதைக்கு செல்வதற்கான அறிவுக்கண்ணை, புத்தரின் நெறியைப் பின்பற்றுகின்றவர்கள் என்று கூறும் இலங்கைத் தேச மக்களுக்கு திறந்து விடுவதாக அமையட்டும்.

# வலி.கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென 21 லட்சத்து 55 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது

### பிரதேச செயலர் மோகன்றாஸ் தகவல்

அச்சுவேலி,மே19

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டு நிவாரணம் வழங்குவதற்கென 21 இலட்சத்து 55 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள இந்த நிதி கடந்த மார்ச் மாதம் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குப் பாதிப்பின் தன்மைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு வாரியாக பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பங்கள் இனங்காணப்பட்டு பாதிப்புத் தொடர்பான விவரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைபங்கீடு செய்யப்பட்டு உரிய பட்டியல் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



பாதிப்புக்குள்ளாகிய குடும்பத் தலைவர்களிடம் கிராம அலுலர் பிரிவு வாரிய நிவாரண நிதி உ த வழங்கப்படும். நிவாரண நிதி உதவி வழங்கும் செயற்பாடுகள் இந்த வாரத்தில் இருந்து பிரதேச செயலகத்தில் இடம்பெறும் என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (203-11)

## வற்றாப்பளை அம்மன் பொங்கலுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

வவுனியா, மே 19

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் விழாவை முன்னிட்டு ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்வதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு நேற்றும், இன்று திங்கட்கிழமையும் ஓமந்தை சோதனைச் சாவடி விசேடமாகத் திறக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

எனவே யாத்திரிகர்கள் வவுனியா மற்றும் பகுதிகளில் இருந்து முல்லைத்தீவுக்கு எந்தவித பிரச்சினையும் இன்றி வந்துசொல்ல முடியும் என்று அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக தென் புறத்தில் இருந்து விடுவிக்கப்படாத பிரதேசத்துக்குள் செல்வதற்கு மாத்திரமே விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். (அ-2)

## பூரணை விழா

யாழ்ப்பாணம்,மே19

கொக்குவில் இராமகிஷ்ண சமிதியினரால் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் பூரணை தினவிழா நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. (203)

## நாயன்மார் நால்வருக்கு அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம்,மே19

யாழ். இந்து சமயப் பேரவையால் வைகாசி விசாக தினமான இன்று திங்கட்கிழமை நாயன்மார் நால்வருக்கு அபிஷேக ஆராதனை நடத்தப் படவுள்ளது.

பன்னிரு திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் என்பன இடம்பெற்று தொடர்ந்து சொற் பொழிவு, அன்னதானம் என்பன இடம்பெறும். (203)

## எழுத்தறிவூட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், மே 19

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்பு நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யுனிசெவ் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு கல்வி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் இந்த எழுத்தறிவூட்டல் வகுப்பு நடத்தப்படவுள்ளது. (202)

## வலி.கிழக்கு பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

அச்சுவேலி, மே 19

வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுபெருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் பிரேதச மலருக்கு ஏற்புடைய ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வலி.கிழக்கு பிரதேசத்தின் வர லாறு, பாரம்பரியம், கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் அபிவிருத்தி, ஆராய்வு, ஆராய்சி சார்ந்த விடயங்கள் பற்றி ஆக்கங்கள் அமைய வேண்டும்.

ஆக்கங்களை ஏ4 தாளில் கணனி தட்டச்சில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்கு மேற்படாததாக எழுதி அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மலர் வெளியீட்டுக் குழு கேட்டுள்ளது.

இதுவரைவெளிவராத சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். தரமான ஆக்கங்கள் பிரதேச மலரில் உள்ளடக்கப்படும். இறுதி முடிவுகள் மலர் வெளியீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் - என வலிகிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (203-11)

## கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளில் கட்டாயக் கல்வி நடைமுறை

வடமராட்சி,மே19

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கட்டாயக் கல்வி நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கோட்டக்கல்வி அதிகாரி எஸ். சித்திர வடிவேல் தெரிவித்துள்ளார்.

கட்டாயக்கல்வி எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப் படவில்லை என சிறுவர் நல மேம்பாட்டு உதவியாளரினால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (203-236)

## கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுச் சங்க கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம்,மே 19

கைதடிமக்கள்நலன் பேணும் நட்புறவுச் சங்கத்தினால் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானோர், கல்வியியல் கல்லூரிக்கு தெரிவானோர், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், அரச நியமனத்தில் பதவியுயர்வு பெற்றோர் ஆகியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது. சங்கத் தலைவர் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கிகிளை முகாமையாளர் க. சண்முலிங்கம் கலந்து கொள்வார். மேற்படி நிகழ்வுக்கான நிதியினை பிரான்சில் வாழும் கைதடி உறவுகள் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (203-288)

## மந்துவிலில் இளையோருக்கு சுகவாழ்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே19

மந்துவில் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் சுகவாழ்வு என்பன தொடர்பான முழுநாள் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு மந்துவில் றோமன்கத்தோலிக்க பாடசாலையில் இடம் பெறவுள்ளது. மந்துவில் பிரேதச பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் இடம் பெறவுள்ள இக் கருத்தரங்கில் மது விலக்கு, ஆரோக்கிய வாழ்வு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகிய தலைப் புக்களில் கருத்துரைகள் வழங்கப்ப டவுள்ளன.

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் நடத்தும் இக்கருத்தரங்கில் பிரதேச இளையோர் கலந்து பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர்

யாழ்ப்பாணம்,மே.19

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு என்னும் தலைப்பில் நடத்தப் பட்டுவரும் பொது விரிவுரைத் தொடர் -7 எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனாவைத்தியசாலைப் பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி பி. லக்ஸ்மன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அங்கொடை மனநல வைத்தியசாலை மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாசன் 'தற்கணிப்பும் சுகநலமும்' என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். (203)

## பரிசளிப்பு நிகழ்வு

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப் பாளர் சி. புஸ்பலிங்கமும் சிறப்பு விருந்தினராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ. சேதுராஜாவும் கலந்து கொள்வர். (203-70)

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருஞான சம்பந்தர் குரு பூசை நடைபெறவுள்ளது. (203)

## அனுமதிப்பத்திரம் இன்றி திறக்கப்பட்ட பாமர்ஸி: நீதிமன்றில் வழக்கு

வலி.தென்மேற்கு,மே19

யாழ். நகரில் அனுமதிப் பத்திரம் இன்றி புதிதாக திறக்கப்பட்ட பாமர்ஸி ஒன்றிற்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட உணவு - மருந்து பரிசோதகர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (203-135)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 07 | 20.05.2008 செவ்வாய்க்கிழமை |
| திதி: | பூரணை காலை 07.55 வரை |
| நட்சத்திரம் : | அனுசம் முழுவதும் |
| சுபநேரம் : | 10.22 - 11.52 |
| ராகுகாலம் : | 02.52 - 04.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் களபூமி குறிஞ்சாக்குளி அருள்மிகு முத்துமாரி அம்பாள்

## தேர்த்திருவிழா இன்று (19.05.2008)

### தேரேறி வந்து திருவருள் பொழிகிறாள்

எழில் பொங்கும் களபூமித் திருப்பதியின்
அருள் மிகு தாயே தேரேறி வருக!
தொழில் கொள்ளும் மானிடர்கள்
தொழுதேற்றும் தாயே தேரேறி வருக!
முகில் வண்ணன் முறை காணும்
முத்து மாரித் தங்கையே தேரேறி வருக!
பொழில் நிறைந்த குறிஞ்சாக்குளியில்
புதுமைகளைப் படைப்பவளே தேரேறி வருக!

ஆக்கம்:
மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்தும் அன்பர்
-புவனா-

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
இராசரத்தினம் பரிமளம்

மலர்வு
15 ✱ 04 ✱ 1929

உதிர்வு
31 ✱ 05 ✱ 2007

திதி: 19.05.2008

நிஜங்கள் எல்லாம் நிழலாகிப் போனதே - அம்மா!
நினைவுகள் எல்லாம் கனவுகள் தானோ அம்மா!
கனதூரம் நீங்கள் போனாலும் காதில் உங்கள் குரல்
ஒலிக்குதம்மா.

குரும்பன்,
ஏழாலை மேற்கு. (சி/552592) குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

985 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

02 19 20 54

மிதுனம்

16-05-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5694633 - 5709569

ஜக்பொட் பரிசு ரூபா. 3,901,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 325,073 | 10/- | 3,250,730/- |
| 2 இலக்கங்கள் | 29,738 | 20/- | 594,760/- |
| 1 இல. + லக்கினம் | 29,218 | 30/- | 876,540/- |
| 2 இல. + லக்கினம் | 2,795 | 100/- | 279,500/- |
| 3 இலக்கங்கள் | 781 | 500/- | 390,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,901,050/- | - |
| மொத்தம் | | | 6,212,030/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 387,698 | | 7,235,530/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,626,300/-

தொடர் இலக்கம் 4815031 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 மே 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 5694700-9-76 |
| மாத்தளை | 5706646-8-64 |
| திருகோணமலை | 5700320-5-23 |
| இரத்தினபுரி | 5694673-2-15 |
| கொழும்பு | 5707168-3-09 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
11, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## சமய சந்நிதிகளில்

சங்கானை, மே19

சங்கானை அரசு ஆல் சித்தி ஞான வயிரவர் ஆலய விசாகப் பொங்கல் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு விசேட ஸ்நபன அபிஷேக ஆராதனை இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு வளர்ந்துகட்டி பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகும். (202-29)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மே19

மீசாலை கிழக்கு சித்திர - வேலாயுதன் ஆலய அலங்கார உற்சவம் நேற்று முன் தினம் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (202-207)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மே19

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

(202-250)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மே19

சங்கானை, சிலம்புப் புளியடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 26ஆம் திகதி வரை உற்சவம் நடைபெறும்.

தினமும் மாலை 4மணிக்கு அபிஷேக பூசைகள் 5.30மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து வீதியுலா வருதலும் இடம்பெறும். (202)

✱ ✱ ✱

நல்லூர், மே19

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சி யம்பதி கந்தசுவாமி கோயில் தீர்த்தத் திரு விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். (203-111)

✱ ✱ ✱

கரவெட்டி, மே19

கரணவாய் வடக்கு வீரபத்திரர் ஆலய அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகமும் மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப்பூசை, திருஊஞ்சல் என்பன இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதல் இடம்பெறும்.

தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். (203-70)

## கல்விக்கான உணவு: செயற்றிட்டப் பயிற்சிப் பட்டறை

வடமராட்சி, மே 19

உலக உணவுத் திட்டத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கல்விக்கான உணவு தொடர்பான செயற்றிட்டப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் வியாழக் கிழமை புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறை வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா கேட்டுள்ளார். (203-236)

## உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவருக்குச் செயலமர்வு

வடமராட்சி, மே 19

ஜி.சீ.ஈ.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நாளை மறுதினம் புதன் கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் செயலமர்வுகளை நடத்தவுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் முதல்நாள் காலை 9 மணிக்கு பௌதீகவியல் பாடத்துக்கும் மறுநாள் காலை 9 மணிக்கு உயிரியல் பாடத்திற்கும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. (203-236)


### புறா விற்பனைக்கு

உயர்ந்த இனப் புறாக்கள் விற்பனைக்குண்டு.
சைனா, பாண்றில், நண்ஸ், றேசிங்கோமர், அவுள், ஜொக் அப்பின், கோமர், யஜன், கறணம், இங்கிலீஸ் நண்ஸ், ஈயிப்சன், ஆபிரிக்கா கோமர், மற்றும் காடைகள்.

தொடர்புகளுக்கு: K.இராஜசேகரன்
815, சிவன் வீதி,உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய். T.P.0779079763 (74250)

### Pentium 4 விற்பனைக்குண்டு

Intel Dual Cor 3.0 (4MB)
LGA Suport Board (7.1 Sound Card)
Ram 512 MB (DDR 2)
HDD 80 GB
ATX Casing (Black)
LCD 17" View Sonic
CD Rom
DVD,RRW
UPS Pawer Tree
Table

70,000/=

Address
Irupalai jangtion,
T.P.0770062838


## ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் தீவிர சோதனை

கொழும்பு, மே 19

ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் உள் நுழைந்த சகல வாகனங்களும் பொலிஸாரால் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

பொலிஸாருடன் இராணுவத்தினரும் விமானப்படையினரும் இணைந்து இத்தேடுதலில் ஈடுபட்டனர்.

பொதிகள் சோதனையிடப்பட்டதுடன் அடையாள அட்டைகளும் பரிசோதனை செய்யப்பட்டன. (அ-01)

## ஈரவிழிகளுடன் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 ★ 01 ★ 1925



உதிர்வு
19 ★ 05 ★ 2006

### அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டு ஜோசவ்

ஆண்டுகள் இரண்டு போனாலும் ஆறுமோ எம் துயரம்
ஆசையுடன் எமையெல்லாம் அன்பைச் சொரிந்து வளர்த்தவரே!
ஐயா என்று நாம் அழைக்க அருகில் இல்லையே நீங்கள் இங்கு
ஆண்டு பல ஆனாலும் உங்கள் அன்பு முகம்தான் மறைந்திடுமோ
இறைவனது இல்லத்தில் இன்பமுடன் நீங்கள் வாழ இன்றல்ல என்றுமே
இறைஞ்சுகின்றோம் இறைபதம்

இல.25A, மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள். (74303)

## நீங்காத மூன்றாம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம்
10 ✱ 09 ✱ 1941



மறைவு
11 ✱ 05 ✱ 2005

அமரர்
### நடராசா கணேசராஜா

(Rtd. Laboratory Asst; Co - Operative Wholesale Establishment. Rtd Distillery / Warehouse officer, state Distilleries corporation)

திதி: 19.05.2008

ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருப்பினும்
அப்பா - உங்களைப் போல் வருமா?
இதயத்தில் இறையாகி உள்ளத்தில் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டியாகி, தெய்வத்துள் தெய்வமாகிய,
எங்கள் அப்பாவே - ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்!

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (74157)

## மரண அறிவித்தல்

### திருமதி டேவிற் பாக்கியம் (வெள்ளைப்பாக்கியம்)



நவாலியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இல,63, குருசோ வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகவும் கொண்ட டேவிற் பாக்கியம் (17.05.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை டேவிற் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யேசுதாசன் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான எமிலி, குணமணி, போல், அற்புதம், கிருபைமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவதிரவியம், தேவதயாளன், காலஞ்சென்ற பிரேமாவதி, மற்றும் தேவசகாயம்(C.T.B), தேவநேசன், (C.T.B), பிறேமரஞ்சினி, பிறேமசாந்தினி (நோர்வே), பிறேமளா(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் றீற்றா (மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி) அமலோதயராணி, ஜேம்ஸ், மாக்கிறட் லூசியா, தேவராஜா, சிவநேசசிங்கம் (நோர்வே), தவராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் மேரி ஷாமினி, டெய்ஸி ஜெயந்தினி, சுலோஜினி, எட்வின் சுஜித் (டோகா), லசியா, துஷாந், கொஞ்சிகா, றொபேட் வின்சன்(சவுதி), ஜெயநேசன்(சவுதி), ஜெயசீலன் (சவுதி) பேடினன் சைலோ, பேடினன் வின்ஸ்லோ, பிபியானா சாம்சன், பல்சியா, ஜோன்சன், ஜெறமி, சாளினி, நிரோஜித், தர்ஷனா (நோர்வே), பிரசாந்த் (நோர்வே), நிஷாந் (நோர்வே), ஷர்மி (லண்டன்), சந்தோஷ் (லண்டன்), பிரவீன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், றூபஸ், றேமிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (19.05.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு நல்லடக்கத்திற்காக நவாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.63, குருசோ வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (74308)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ்!



ஜெய்ப்பூர், மே 19

ஐ.பி.எல். தொடரின் அரையிறுதிக்கு முதல் அணியாக நுழைந்தது வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் சிமித், அஸ்னாத்கரின் விளாசல் ஆட்டம் கைகொடுக்க, டிராவிட்டின் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியை 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதன் மூலம் அரையிறுதி வாய்ப்பை ராஜஸ்தான் அணி பெற்றுக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற டிராவிட் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தொடக்க வீரர்களாக சிமித், அஸ்னாத்கர் களமிறங்கினர். அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய அஸ்னாத்கர், சஹீர்கான் வீசிய முதல் ஓவரில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து அசத்தினார். சஹீரின் அடுத்த ஓவரில் சிமித் வரிசையாக இரண்டு பவுண்டரிகள் அடித்தார். தொடர்ந்து விளாசிய இவர் அப்துர் ரசாக் வீசிய 7ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் உட்பட அணிக்கு 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பெங்களூர் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய ஆரம்ப ஜோடி 11ஆவது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கையை 100ஆக உயர்த்தியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அஸ்னாத்கர் அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை எடுத்தநிலையில் அஸ்னாத்கர் ஆட்டமிழந்தார். இவர் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் உட்பட 50 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து வந்த வட்ஸன், கும்ளே ஓவரில் 2 பவுண்டரி விளாசினார். அதே ஓவரின் கடைசிப் பந்தில் சிமித் ஒரு சிக்ஸர் அடித்து அரைச்சதம் பதிவு செய்தார். 17ஆவது ஓவரில் இந்த ஜோடி அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகள் அடிக்க, ஓட்டவிகிதம் ரொக்கெட் வேகத்தில் எகிறியது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்களை எடுத்தது. சிமித் 75 ஓட்டங்களுடனும் (2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள்), வட்ஸன் 46 ஓட்டங்களுடனும் (28 பந்துகளில்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கைத் துரத்திய பெங்களூர் அணியை தன்வீர் வேகத்தால் மிரட்டினார். இவரது புயல்வேகப் பந்துவீச்சை எதிர்கொள்ளத் திணறிய அருண்குமார் (0), கோஹ்லி (3) ஆகியோர் விரைவில் வெளியேறி, அணிக்கு மோசமான தொடக்கத்தைப் பெற்றுக்கொடுத்தனர். அடுத்து வந்த மிஸ்பா 'டக் அவுட்' ஆகி, அதிர்ச்சி அளித்தார். மந்தமாக விளையாடிய கலிஸ் 29 பந்துகளில் 20 ஓட்டங்களை எடுத்து பவிலியன் திரும்பினார். அதிரடி காட்டுவார் என எதிர்பார்க்கப்பட்ட கமரூன் வைற் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். பெங்களூர் அணி 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

இக் கட்டான சூழ்நிலையில் களமிறங்கிய டிராவிட், ராஜஸ்தான் பந்துவீச்சை அடித்து நொறுக்கினார். 13ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் உட்பட 19 ஓட்டங்களை எடுத்தார். தேவராஜ் (9) விரைவில் வெளியேறினார். ஒரு முனையில் வரிசையாக விக்கெட் விழுந்தாலும் மறுமுனையில் டிராவிட் தனி மனிதராகப் போராடினார். யூசுப் பதான் பந்தில் இமாலய சிக்ஸர் அடித்து அசத்தினார். இவரது அடுத்த ஓவரில் மூன்று சிக்ஸர்கள் விளாசிய டிராவிட் 25ஆவது பந்தில் அரைச்சதம் கடந்து, ரசிகர்களுக்கு வாணவேடிக்கை காட்டினார். 6 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் விளாசிய டிராவிட் 36 பந்துகளில் 75 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 132 ஓட்டங்களை எடுத்து, 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

## லோட்ஸ் டெஸ்ட் மழையால் பாதிப்பு

லண்டன், மே 19

லோட்ஸில் இடம்பெற்றுவரும் இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம், மூன்றாம் நாள் ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை தொடங்கிய இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, இரண்டாம் நாள் ஆட்டத்தில் சைட்பொற்றமின் பந்துவீச்சில் மிகுதி 4 விக்கெட்டுகளையும் இழந்த நியூஸிலாந்து அணி, தனது முதல் இன்னிங்ஸில் 277 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி ஆட்டம் முன்னதாகவே நிறுத்தப்படுத்தப்படும் போது விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் 3ஆம்நாள் ஆட்டம் நடந்தது. 9 ஓவர்கள் பந்துவீசிய நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை மழை குழப்பியது. தொடர்ந்தும் மழை பெய்தமையால் மூன்றாம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அலஸ்ரியர் குக் 53 ஓட்டங்களுடனும், அன்ட்ரூ ஸ்ரோரஸ் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

## பஞ்சாப் அணி 'திறில்' வெற்றி

டில்லி, மே.9

ஐ.பி.எல். தொடரின் பரபரப்பான லீக் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, டில்லி டேர்டெவில்ஸ் அணியை டக்வேர்த் -லூவிஸ் விதிமுறைப்படி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஷேவாக்கின் அதிரடி அரைச்சதம் வீணானது.

நேற்றுமுன்தினம் டில்லியில் நடந்த 40ஆவது லீக் போட்டியில் ஷேவாக் தலைமையிலான டில்லி டேர்டெவில்ஸ் அணி, யுவராஜின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைச் சந்தித்தது. நாணயச் சுழற்சியில் வென்ற ஷேவாக் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

டில்லி அணிக்கு ஷேவாக், கம்பீர் இணைந்து அதிரடி ஆரம்பத்தைத் தந்தனர். சிறிசாந்த் வீசிய முதல் ஓவரிலேயே சிக்சர் விளாசினார் ஷேவாக். இர்பான் பதான் வீசிய 4ஆவது ஓவரில் கம்பீர் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். வி.ஆர். வி.சிங் வீசிய 6ஆவது ஓவரில் ஷேவாக் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி, கம்பீர் ஒரு பவுண்டரி அடிக்க, மொத்தமாக 22 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. ரமேஷ் பவார் சுழலில் கம்பீர் (40) சிக்கினார்.

தனது அதிரடியை தொடர்ந்த ஷேவாக், பியூஸ் சாவ்லா வீசிய 8ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்தார். ரமேஷ் பவார் பந்திலும் ஒரு சிக்ஸர் விளாசினார். இந்த நேரத்தில் மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது டில்லி அணி 8.1 ஓவர்களி 94 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மழை நின்றதும், 11 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்த முடிவு செய்யப்பட்டது. அடித்து ஆட முற்பட்ட டில்லி வீரர்கள் தவான்(8), டில்சான்(8), மஹ்ரூப்(0) ஆகியோர் விரைவாக வெளியேறினர். அசத்தல் ஆட்டத்தைத் தொடர்ந்த ஷேவாக் 26 பந்துகளில் 51 ஓட்டங்களை (5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள்) எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் இரண்டாவது அதிவேக அரைச்சதம் அடித்தார். டில்லி அணி 11 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 118 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு டக்வேர்த்-லூவிஸ் விதிமுறைப்படி 11 ஓவர்களில் 123 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மார்ஷ் (2) இம்முறை ஏமாற்றினார். அடுத்து வந்த அணித் தலைவர் யுவராஜ் 3 சிக்ஸர்களுடன் 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இதற்குப் பின் மஹேல ஜெயவர்த்தன, போமர்ஸ்பாச் இணைந்து கலக்கலாக ஆடினர். ஷேவாக் வீசிய 5ஆவது ஓவரில் ஜெயவர்த்தன 3 பவுண்டரிகள், போமர்ஸ்பாச் ஒரு சிக்ஸர் அடிக்க, மொத்தம் 22ஓட்டங்கள்கிடைத்தன. பாட்டியா வீசிய ஓவரில் ஜெயவர்த்தனா ஒரு சிக்சர் அடிக்க, மீண்டும் மழை குறுக்கிட்டது. அப்போது பஞ்சாப் அணி 8 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 94 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதையடுத்து டக்வேர்த்-லூவிஸ் விதிமுறைப்படி பஞ்சாப் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஜெயவர்த்தனா 36 ஓட்டங்களுடனும், போமர்ஸ்பாச் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## டொமினிக்கன் ஜனாதிபதித் தேர்தல்: பேர்னாண்டஸ் மீண்டும் தேர்வு

சான்டோ டொமிங்கோ, மே.19

டொமினிக்கன் குடியரசின் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் லியோனல் பெர்ணாண்டஸ் வெற்றிபெற்றுள்ளார்.

டொமினிக்கன் குடியரசு ஜனாதிபதி லியோனல் பெர்ணாண்டஸின் பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் நடைபெற்ற வன்முறையில் 8 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள். நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் தற்போதைய ஜனாதிபதி லியோனல் பெர்ணாண்டஸ் வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் 3ஆவது முறையாக ஜனாதிபதி ஆகிறார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டொமினிக்கன் புரட்சிகரக் கட்சித் தலைவர் மிக்யுல் வர்கஸ் மால்டோனடோ தனது தோல்வியை பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

## நேபாள எம்.பிக்கள் 27இல் பதவியேற்பு

காத்மண்ட், மே.19

நேபாள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாள அரசியல் நிர்ணய சபைக்கு சமீபத்தில் தேர்தல் நடைபெற்றது. அதில் மாவோயிஸ்ட்டுக்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்றனர். இந்நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 601 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 27ஆம் திகதி பதவி ஏற்பார்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 28ஆம் திகதி புதிய நாடாளுமன்றக் கூட்டம் முதன்முறையாக நடைபெறுகிறது. இதற்கிடையே மாதேசிக் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கப்போவதாக மாவோயிஸ்ட் மூத்த தலைவர் பாபுராம் பட்டாரை அறிவித்துள்ளார்.

பதவியேற்ற பின்னர் மன்னரின் எதிர்காலம் குறித்து அரசியல் கட்சிகள் ஆராயவுள்ளன என்று தெரியவருகின்றது. இதற்காக மாவோயிஸ்ட் கட்சி சகல அரசியல் கட்சிகளுடனும் தனித்தனியாகப் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகின்றதென்றும் அறியமுடிகிறது.

# பலஸ்தீன நாடு விடுவிக்கப்படும் வரை இஸ்ரேலுக்கு எதிரான யுத்தம் தொடரும்

## புதிய நாடாவொன்றின் மூலம் பின்லேடன் சூளுரை



கெய்ரோ, மே 19

பலஸ்தீனம் விடுவிக்கப்படும் வரை இஸ்ரேலுக்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் எதிரான அல் - குவைதாவின் புனித யுத்தம் நீடிக்கும் என ஒசாமா பின்லேடன் புதிய ஒலிநாடாவொன்றின் வாயிலாக எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார். இவரால் இவ்வாண்டு விடுவிக்கப்பட்ட மூன்றாவது பதிவு அறிக்கை இதுவாகும்.

எனது இஸ்லாமிய தேசத்தைப் பொறுத்த மட்டில் பலஸ்தீன விவகாரமே எனக்கு ஒரு பூதாகரமான விவகாரமாகவுள்ளது. ஆரம்பம் முதல் இவ்விடயமே என்னுள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அநீதிக்கும் ஒடுக்குதலுக்கும் எதிராக போராடும் வேட்கையில் எமது போராளிகள் 19 பேர் தயாராக உள்ளனர்.

அமெரிக்காவுக்கு எதிரான செப்டெம்பர் 11ஆம் திகதி தற்கொலைத் தாக்குதல்களை 19 முஸ்லிம் தீவிரவாதிகளே நடத்தியுள்ளார்கள். அத்தகைய பாரிய தாக்குதல்களை மேற்கொள்ள மேலும் 19 பேர் தயார் நிலையில் உள்ளனர் என்பதை ஒசாமா பின்லேடன் இப்படி சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார் என அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்புதிய 10 நிமிட ஒளிப்பதிவு நாடா அல் குவைதாவால் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இணையமொன்றினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாடா எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் வெளியாகவில்லை.

எனினும், இஸ்ரேலிய நாடு உருவாக்கப்பட்ட 60 ஆவது வருட கொண்டாட்டம் மே மாதம் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக தனது வெறுப்பை பின்லேடன் இதில் வெளிப்படுத்தியுள்ளார்.

### அவர்கள் உன்னத மனிதர்கள் நாங்கள் பயங்கரவாதிகளா?

ஒசாமா பின்லேடன் தமதுரையில் மேலும், "இங்கு படையெடுத்த யூதர்களை - எங்கள் மண்ணை ஆக்கிரமித்துள்ள யூதர்களை கடந்த 60 வருடங்களாக மேற்கத்தைய ஊடகத்துறை உன்னத மனிதர்களாக உருவகப்படுத்தி அறிமுகப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளது. இவர்களால் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளான நாங்கள் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளோம்" - என சாடியுள்ளார்.

பின்லேடன் தம் நாடாவில் மேற்கத்தைய தலைவர்களை வன்மையாகச் சாடியுள்ளார். "இப்போது இவர்கள் இஸ்ரேலிய - பலஸ்தீன சமாதான முன்னெடுப்புகள் குறித்து ஆர்வங்காட்டுகிறார்கள். எனினும் இவர்கள் நேர்மையற்றவர்கள். குரூர தாக்குதல்களுக்காக இஸ்ரேலைக் கண்டிக்கத் தவறியவர்கள்" - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### கயிறு திரிக்கிறார்கள்

"60 ஆண்டுகளுக்கு முன்னரே சமாதான பேச்சுகள் ஆரம்பமாகிவிட்டன. எனினும் இன்னும் இது தொடர்பாக கயிறு திரித்து வருகிறார்கள் முட்டாள்கள். எத்தனையோ அழிவுகளுக்கும் குரூரப் படுகொலைகளுக்குப் பின்னரும் உங்கள் (மேற்கத்தைய) தலைவர்கள் கொள்கைகளைப் பற்றியும் கோட்பாடுகளைப் பற்றியும் பேசுகிறார்கள். இது சகிக்க முடியாதொன்று - என்றும் அவர் சாடியுள்ளார்.

# பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து மண்டேலாவை நீக்கியது அமெரிக்கா

வோஷிங்டன், மே 19

தீவிரவாதிகள் பட்டியலில் இருந்து நெல்சன் மண்டேலா உட்பட தென்னாபிரிக்கத் தலைவர்களின் பெயர்கள், அமெரிக்காவின் தீவிரவாதிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் இனவெறி கொண்ட வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து போராடியவர் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா. இவர் உட்பட அக்கட்சியின் முன்னணித் தலைவர்கள் மீது அப்போதைய வெள்ளையர் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனைத் தொடர்ந்து மண்டேலா 26 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கட்சி தடை செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவிலும் மண்டேலா உட்பட அக்கட்சியின் தலைவர்களின் பெயர்கள், தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்றன. இதனால் அவர்களால் அமெரிக்காவுக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

அமெரிக்க நாடாளுமன்றில் பிரதிநிதிகள் சபையின் வெளியுறவுக் குழுத் தலைவராக இருப்பவர் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஹோவார்டு பெர்மான். தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்று இருந்த மண்டேலா உள்ளிட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை நீக்க ஹோவார்டு முயற்சி எடுத்தார். இதற்கான சட்டப்பிரேரணை, பிரதிநிதிகள் சபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து தீவிரவாதிகள் பட்டியலிலிருந்து அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தல் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. அணியில் சேர ஹிஸ்புல்லா குழு முன்வந்தால் கட்சி கூடி அதுபற்றி முடிவு

## பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

கொழும்பு, மே 19

கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட ஹிஸ்புல்லா விரும்பினால் அவரைக் கட்சியில் இணைப்பதா இல்லையா என்பது குறித்து ஐ.தே.கட்சியின் செயற்குழு தீர்மானம் எடுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின் அத் தேர்தலில் மோசடிகள் மூலம் வெற்றி பெற்ற அரசு, நடத்திக்கொண்டிருக்கும் நாடகத்தை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசிய இந்த அரசு, தேர்தல் முடிந்து ஒருவாரம் முடிவதற்குள்ளேயே அந்த வாக்குறுதிகளை மீறிவிட்டது.

இந்த அரசின் இந்தமாதிரியான ஏமாற்று வித்தைகள் ஒன்றும் இந்த நாட்டுக்குப் புதியனவல்ல. இந்த அரசு ஆட்சிபீடம் ஏறியது முதல் இந்த மாதிரியான ஏமாற்று நாடகங்களைத்தான் நடத்தி வருகிறது.

அரசின் தற்போதைய ஏமாற்று வித்தைக்குப் பலியாகியிருப்பவர் ஹிஸ்புல்லா. அவருக்கு முதலமைச்சர் பதவியைத் தருவார் எனக் கூறிப் பின்னர் ஜனாதிபதி ஏமாற்றிவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அவரும் அவருடன் இணைந்து இரண்டு உறுப்பினர்களும் கிழக்கு மாகாணசபையில் எதிர்க்கட்சியில் தாங்கள் சுயாதீனமாக இயங்கப்போகிறார்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அவர்கள் மூவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப்போகின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இது தொடர்பாக அவர்களுடன் எந்தவிதமான சந்திப்போ, பேச்சுகளோ இடம்பெறவில்லை.

இருப்பினும், அவர்கள் எம்முடன் இணைய முயற்சித்தால் இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எமது கட்சியின் செயற்குழு மேற்கொள்ளும் - என்றார். (அ-சி)

# மட்டு. தொண்டு நிறுவனத்தின் சாரதி கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டார்

கொழும்பு, மே.19

மட்டக்களப்புத் தொண்டர் நிறுவனமொன்றில் சாரதியாகத் தொழில் புரிந்து வந்த 40 வயது குடும்பஸ்தரை பம்பலப்பிட்டி விடுதியிலிருந்து வெள்ளை வானில் வந்தவர்கள் அடித்து, கடத்திச் சென்றனர் என - தொழில் தொழில்நுட்பப் பயிற்சி பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் சக ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் வசிக்கும் வான் சாரதியான வீரக்குட்டி சந்திரலிங்கம் என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவராவார்.

வெள்ளை வானில் சிவில் உடையில் நால்வரும் மற்றொருவர் பொலிஸ் சீருடையிலும் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி லக்மால் விடுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 16ஆம் திகதி 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது

# மண் மீட்பதற்கான யுத்தத்தைப் போன்று மொழி மீட்கும் போரும் அவசியமானது

## தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் கருத்து

கிளிநொச்சி, மே 19

"மண் மீட்கும் போர் போன்று மொழி மீட்கும் போரும் அவசியமானது. இதில் தமிழ் மக்கள் முழு மூச்சாக ஈடுபடவேண்டும்."

- இவ்வாறு தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளையில் கடந்த சனிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார வழி வானொலியான "புலிகளின் குரல்" நடத்திய முத்தமிழ் மன்றத்தின் தமிழ் விழாவில் கலந்துகொண்டு "தமிழ் எங்கள் உயிர்" எனும் தலைப்பில் வெ.இளங்குமரன் உரையாற்றினார். இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது முன்னோர்கள் உருவாக்கிய மொழியை நாம் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். தமிழ் மொழியானது 2000 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு வளமான மொழியாக இருந்தது என்பதனை சங்க இலக்கியங்களின் சொற்களஞ்சியங்களை எடுத்துப் பார்த்தால் தெரியும். எமக்கு வியப்பாக இருக்கும். தொன்மையான மொழிகள் எல்லாம் வழக்கிழந்து போன நிலையில், இரண்டு மொழிகள் மட்டும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

அதில் சீனம் என்பது உலகில் உள்ள மக்கள் தொகையிலும், பெரும் தொகையான மக்களின் தாய்மொழியாக இருந்ததாலும் சீனா, தொடராக ஆட்சியில் இருந்து ஆட்சி மொழியாக இருப்பதாலும் சீன மொழி வழக்கில் இருக்கின்றது.

மற்றது தமிழ் மொழி. உலகில் தலை நிமிர்ந்து இருக்கின்றது எனில், அம்மொழியின் தனிச்சிறப்பும், வளமான இனிமையான மொழியாக இருப்பதால்தான் அது நிலைத்து இருக்கின்றது.

தமிழைப் பொறுத்த மட்டில் ஏனைய மொழிகளுக்கு நிகராக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நிலையில் எமது மொழியை நாம் பேணவேண்டும். எமது மொழிக்காக நாம் உழைக்க வேண்டும். இதற்காக எமக்கு என தனி நாட்டை உருவாக்க வேண்டும். இம்மண்ணில் எழுச்சி ஏற்படுத்தப்பட்டு இழந்த இறைமையை மீட்டெடுப்பதற்கு ஒரு போராட்டம் நடைபெறுகின்றது.

எமது விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மொழி-பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்கின்ற மாவீரர்களின் ஈகத்தைக் கொடுத்து, மிகப்பெரிய இனத்தின் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற அமைப்பு, மொழியையும் கலை பண்பாட்டையும் சேர்த்துப் பேணுகின்ற அமைப்பையும் சேர்த்து நடத்துகின்றது என்கின்ற வகையில் மண்ணில் புதுமையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

மொழி காக்கப்படவேண்டும். இன அடையாளங்கள் கலை, பண்பாடு பேணப்படவேண்டும். எமது முன்னோர்கள் காட்டிச் சென்ற வழியில் எமது செயற்பாடுகள் அமையவேண்டும். அந்தவகையில் தமிழினம் மீது ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் தாக்கங்களை எல்லாம் நீக்கி இம்மண்ணில் தமிழ்மக்கள் முழு விடுதலையைப் பெற்று உயர்வான நிலையை அடையவேண்டும் என்ற விழிப்புணர்வு இம்மண்ணில் உருவாகியுள்ளது.

இதனை எழுச்சி கொள்ள வைப்பது இம் மண்ணின் எதிர்காலத்தைத் தாங்கி நிற்கும் இளையவரின் கடமை. அதற்காக அனைவரும் முன்னின்று உழைக்க வேண்டும் - என்றார் அவர்.

## பூஸாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த காரணத்தினால், நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டபின்னர் நியூ மகஸின் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

எனினும் நேற்று மதியம் திரும்பவும் அவர்களும் பூஸாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுவிட்டனர் என அறியவந்தது. (உ)

## ஹிஸ்புல்லாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் ஆலோசனைகள் குறித்து கிழக்கு மாகாண உலமாக்களுடனும் ஏனைய இஸ்லாமிய மார்க்கத் தலைவர்களுடனும் பிரமுகர்கள் மற்றும் புத்திஜீவிகளுடனும் கலந்தாலோசித்து உரையாடிய பின்னர் தமது முடிவை - பதிலை - ஜனாதிபதிக்கு தாம் தெரிவிப்பார் ஹிஸ்புல்லா கூறியதாக அறியவந்தது.

இதற்கிடையில்-

கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் பிள்ளையானும் நேற்று தொலைபேசி மூலம் ஹிஸ்புல்லாவுடன் தொடர்புகொண்டு பேசினார் என அறியவந்தது. கிழக்கு மாகாணத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பிள்ளையான், ஹிஸ்புல்லாவை இந்த உரையாடலின்போது கேட்டுக்கொண்டார் எனத் தெரிய வந்தது.

இதேசமயம்-

முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் பிள்ளையான் நேற்று தலதா மாளிகைக்கு விஜயம் செய்தார். மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அதிபதிகளையும் அவர் சந்தித்து ஆசிபெற்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம்-

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இத்தேர்தலில் தனக்குக் கிடைத்த இரு போனஸ் ஆசனங்களுக்கும் இருவரை மாகாணசபை உறுப்பினர்களாக நியமித்துள்ளது.

ஆளும் தரப்பில் இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த ஆர்.மோனகுருசாமியும், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவாகும் வாய்ப்பை இழந்த பிரியந்த பிரேமகுமாரவுமே இவ்வாறு மாகாணசபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். (உ)

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மனித உரிமைக் கவுன்ஸிலில் ஆசிய நாடுகளுக்கான ஆசனத்திற்காக இலங்கையும் பாகிஸ்தானும் போட்டியிட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிய நாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நான்கு ஆசனங்களுக்காக ஜப்பான், பஹ்ரெய்ன், தென்கொரியா, கிழக்கு திமோர், பாகிஸ்தான், இலங்கை ஆகியன போட்டியிடுகின்றன.

ஜப்பான், தென்கொரியா, பஹ்ரெய்ன் ஆகிய நாடுகளுக்குப் போதுமான ஆதரவு கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இராஜதந்திரிகள் கிழக்கு திமோரிற்கான வாய்ப்பை முற்றாக நிராகரித்துள்ளனர்.

இதன் காரணமாக இறுதி ஆசனத்திற்குப் பாகிஸ்தானும் இலங்கையும் போட்டியிடவேண்டிய சூழ்நிலை உருவாகலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான சூழ்நிலை உருவாவது இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் முரண்பாடு மிகுந்த மாற்றத்தைத் தோற்றுவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநலவாய அமைப்பு பாகிஸ்தான் மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் எனக் கோரி இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் இலங்கை கடுமையாக வாதாடியிருந்தது.

மனித உரிமை அமைப்புகள் மற்றும் மேற்குலக நாடுகளின் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள இலங்கை, சர்வதேச அளவில் தனக்குப் போதிய ஆதரவுள்ளதை நிரூபிப்பதற்காக மனித உரிமை கவுன்ஸிலில் மீண்டும் இடம்பெறுவதில் உறுதியாகவுள்ளது. அமைச்சர்கள் ரோஹித போகொல்லாகம, ஜி.எல். பீரிஸ் போன்றவர்கள் இலங்கை மீண்டும் தெரிவுசெய்யப்படுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

எனினும் மனித உரிமை அமைப்புகள் இலங்கைக்கு எதிராக கடும்பிரசாரத்தை மேற்கொண்டுள்ளன. (உ)

# கண்டி நகரப் பகுதியில் சந்தேகத்தில் 15 பேர் கைது

கொழும்பு, மே 19

கண்டி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 15 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

கண்டி, மாநகர சபைக்குட்பட்ட பிரிவில் முறையான பதிவுகள் மற்றும் அனுமதிகள் இல்லாமல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சி)

## கோட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முன்னெடுக்கப்படும் விதம் குறித்து நாம் சந்தேகம் கொண்டுள்ளோம்.

திருகோணமலையில் உள்ள பிள்ளையான் குழு அலுவலகத்தைச் சேர்ந்த ஜினா எனப்படும் விஜயபாலன் ஜினேந்திரனுடைய மோட்டார் சைக்கிளே குண்டு தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

திருகோணமலை பொலிஸார் ஜினாவை கைதுசெய்துள்ளனர். எனினும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வந்த குழு கலைக்கப்பட்டுள்ளது. விஜயபாலன் பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு தலையிட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகேஸ்வரன் உட்பட பலருடைய கொலைகள் குறித்த விசாரணைகள் மூடி மறைக்கப்பட்டமை போல இதுவும் மூடி மறைக்கப்படலாம் என நாங்கள் கருதுகின்றோம்.

தேர்தல் முறைகேடுகளைத் தடுக்க முயன்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கருணா குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் மூடி மறைக்கப்பட்டுள்ளது - என்றார் அவர். (அ-உ)

## மரண அறிவித்தல்

### முருகையா சுதாகரன்

தெல்லிப்பழை, ஆனைக்குட்டி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது தென்னிந்தியாவில் வசித்தவருமாகிய முருகையா சுதாகரன் நேற்று (18.05.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் காந்திமதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், பிரபாலினியின் அன்புக் கணவரும், கீதாஞ்சலி, பிரபாகரன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தென்னிந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவபதி',*
*புலம் வீதி, கைதடி மேற்கு.*
*T.P.No. 060 221 4664, 009199 65086900*

தகவல்:
பிரபாலினி ([illegible])


நில்லுங்கள்......... ஒரு நிமிடம்.......... சிந்தியுங்கள்

2.0 GHz Intel Pentium Dual core (3 Years)
ASUS Board (P5GC-MX-1333) (3 Years)
1GB DDR-II Kingston Ram (3 Years)
160GB SATA HDD (Samsung) (3 Years)
15" View Sonic Monitor (3 Years)
ATX Cabinet (MS 06/05) (1 Year)
UPS (1 Year)
DVD Writer - SONY (1 Year)
PS/2 Key Board
Optical Mouse

64,000/=

2.0 GHz Dual Core Processor (3 Years) - 9,250/=
ASUS P5 GC-MX- 1333 M-Board (3 Years) - 7,250/=
512MB DDR II RAM Kingston (3 Years) - 1,600/=
1GB DDR II RAM Kingston (3 Years) - 2,900/=
DVD Writer SONY (1 Year) - 4,200/=
Scanner Cannon LIDE25 (1 Year) - 6,600/=
UPS EAST (1 Year) - 6,000/=
UPS ABLEREX (1 Year) - 7,000/=
15" Viewsinic Silver black (3 Years) 12,750/=
15" Viewsinic Black (3 Years) 15,500/=
Mobil Hard Drive 120 GB (3 Years) 10,500/=
3.5" HDD External Enclosure 4,900/=
PCI IEEE Card 3000/=
I/O Card 3000/=
Bar Code Scanner 9,500/=
256 MB PCI Express 6,900/=
128 MB PCI Express 6300/=
Mini Key board 1,500/=

JAFFNA — MARSHA SYSTEMS (PVT) LTD, # 74, Kannathiddy Junction, Jaffna. T.P:- 0212229418, 0777667108
NELLIADY — TEKNEL COMPUTERS & TECHNOLOGY, 364/364, Kodikamam Road, Nelliady. T.P:- 0777069934
CHAVAKACHCHERI — SCOT COMPUTER CENTRE, Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri. T.P:- 0776701394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.